செந்தமிழ்

தொகுதி 84 செப்டம்பர் 90 பகுதி 3

ஆசிரியர். மா. தனுக்கோடிபாண்டியன், பி ஏ., பி.எல்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் டாக்டர்
நா. பாலுசாமி, எம் ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி.

செந்தமிழ்

தொகுதி 84 | செப்டம்பர் 90 | பகுதி 3

ஆசிரியர். மா. தனுக்கோடிபாண்டியன், பி.ஏ., பி.எல்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் டாக்டர்

நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி.

பொருளடக்கம்

1. மூவிடச் சுட்டுப்பெயர்கள் — 1
பாவலரேறு ச. பாலசுந்தரம்

2. சிலம்பில் பயண இலக்கியக்கூறுகள் — 9
டாக்டர் தா. ஈசுவரபிள்ளை

3. மொழிபெயர்ப்பில் சொற்பொருள் சிக்கல்கள் — 27
செ. இராசேசுவரி

4. வரலாற்றியல் திறனாய்வு — 32
டாக்டர் ம. மதியழகன்

5. திருவடிச்சிறப்பு — 41
டாக்டர் ஆ. ஆனந்தராசன்

6. நூல் மதிப்புரை — 48

வாழ்த்துகிறோம்



தமிழ்ச் சங்கத்தின் புதிய செயலாளர்

திரு மா. தனுக்கோடி பாண்டியன்
பி.ஏ., பி.எல்,

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் புதிய செயலாளராக திரு. மா. தனுக்கோடி பாண்டியன் அவர்கள் 1-7-90 முதல் மதுரைத் தமிழ்சங்க ஆட்சிக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 20-2-1932இல் பிறந்தவர். சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக மதுரையில் தலைசிறந்த வழக்கறிஞராகவும், இராமநாதபுரம் மாவட்ட அரசு வழக்கறிஞராகவும் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார். மதுரை மேற்குச் சுழற்சங்கத்தில்(Rotary)செயலாளராகப் பணியாற்றியவர். மேலும் மதுரை வடக்கு, தெற்கு சுழற்சங்கங்களை நிறுவி, அவற்றின் வளர்ச்சிக்காக அரும்பணி புரிந்துள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆளவை உறுப்பினராக (Senate Member) மூன்று ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். இவர் 1971 முதல் 1990 வரை செந்தமிழ்க்கல்லூரிச் செயலாளராக இருந்து சிறப்பான முறையில் சேவை செய்துள்ளார். இவரது தலைமையில் தமிழ்ச் சங்கத்தில் பல்வேறு இலக்கியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்போது மதுரை வழக்கறிஞர் சங்கத்தலைவராக உள்ளார்.

சமுதாயப்பண்பும் நல்லன பல செய்தல் வேண்டும் என்ற எண்ணமும் வாய்க்கப் பெற்றவர் இவர். புகழ்பெற்ற மதுரைத் தமிழ்ச்சங்கம் இவரது பதவிக்காலத்தில் மேலும் பல நிலைகளில் வலிவும் பொலிவும் பெறும் என்பது உறுதி.

நா. பாலுசாமி

பொறுப்பாசிரியர்

வாழ்த்துகிறோம்

மதுரை செந்தமிழ்க் கல்லூரியின் புதிய செயலாளர்

மா. சங்கரபாண்டியன்,
பி.ஏ., பி.எல்.,

மதுரைத் தமிழ்ச் சங்க நிருவாகத்தின் கீழ் நடைபெற்று வரும் செந்தமிழ்க் கல்லூரிக்குப் புதிய செயலாளராக வழக்கறிஞர் திரு மா. சங்கரபாண்டியன், பி.ஏ ,பி.எல்., அவர்கள் 11. 7. 90 முதல் மதுரைத் தமிழ்ச் சங்க ஆட்சிக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 10. 8. [illegible] இல் பட்டம்புதூர் (காமராசர் மாவட்டம்) என்னும் ஊரில் பிறந்தவர். தேவகோட்டை உயர்நிலைப் பள்ளியிலும், அமெரிக்கன் கல்லூரியிலும் பயின்று பின்னர் சென்னையில் சட்டக் கல்வியும் கற்று முப்பதாண்டுகளுக்கு மேலாக மதுரை மாவட்ட நீதி மன்றங்களிலும் பிற நீதி மன்றங் களிலும் வாதாடி வரும் திறமையும் சிறப்பும் மிக்கவர். இவர் 1978 முதல் 1984 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆளவை உறுப்பினராக (SENATE MEMBER) ஆறு ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். இப்போதும் இவர் ஆளவை உறுப்பினராக உள்ளார். இவர் 1971 முதல் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் 1976 முதல் செந்தமிழ்க் கல்லூரியின் ஆட்சிக் குழுத் தலைவராகவும் இருந்து சிறப்பான சேவை செய்துள்ளார். இப்பொழுது புகழ்மிக்க மதுரை எட்வர்டு மன்றத்தின் செயலாள ராகவும் இருந்து வருகிறார். இவர் பொதுத் தொண்டில் ஆர்வம் மிக்கவர்.

செந்தமிழ்க் கல்லூரி இவரது செயல்திறனால் மேலும் பல வளர்ச்சிகளைக் காண இருக்கிறது என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ந. பாலுசாமி
பொறுப்பாசிரியர்

மூவிடச் சுட்டுப்பெயர்கள்

பாவலரேறு ச. பாலசுந்தரம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

தொன்னூலோர் நெறியினை அறிவியல் நோக்கொடு விளக்கும் தொல்காப்பியம், எழுத்ததிகாரம் நூன்மரபின் இறுதிக்கண் அ, இ, உ இம்மூன்றும் சுட்டு என விளம்புகின்றது. உயிர் எழுத்துக்களுள் இம்மூன்றும் சுட்டிடைச் சொல்லாக வரும் என்பது அதன் கருத்து. இவற்றை முதனிலையாகக் கொண்டு இருதிணை ஐம்பாற் சுட்டுப்பெயர்களும், இடம், காலம், தன்மை, உறவு முதலாயவற்றைக் குறித்துவரும் பெயர்களும் தோன்றும். பழந் தமிழில் இம்மூன்று சுட்டுக்களான் உணர்த்தப்படும் பொருள்களை ஒருங்கு குறித்துணர்த்துவதற்கு எகரம் பயன்படுத்தப்பட்டதென்பதும், பின்னர் இலக்கண முறையான் வரையறை செய்த காலத்து எகரம் எஞ்சாப்பொருள்தரும் இடைச்சொல்லாக ஆக்கிக் கொள்ளப்பட்டது என்பதும், மூவிடப்பெயர் ஆய்வுரையின்கண் விளக்கப்பட்டது. எனவே சுட்டு என்பது அ, இ, உ ஆகிய மூன்றும் அவற்றின் நீட்சியுமேயாகும்.

இவற்றுள் அகரம் சேய்மையிடத்தையும், இகரம் அண்மை இடத்தையும் (தன்மையை அகப்படுத்தும் இடம் அண்மை) உகரம் அவ்விரண்டிற்கு இடைப்பட்ட இடத்தையும் உணர்த்தும் பொருளமைப்புடையவையாகும். சேய்மையைச் சுட்டுங்கால் தலையை அண்ணாந்து நீட்டியும், அண்மை இடத்தைச் சுட்டுங்கால் தலையைக் குனிந்து நிலன்நோக்கியும், அவற்றிற்கு இடைப்பட்ட இடங்களைச் சுட்டுங்கால் தலையைச் சிறிது முன்னீட்டிக் குனிந்தும் மக்கள் நிகழ்த்தும் மெய்ப்பாடுகளானும் பேசுதற்கியலாத ஊமையர் அவ்வாறு செய்யுமிடத்து முறையே ஆ, ஈ, ஊ என ஓசையெழுப்பிக் காட்டுதலானும் உணரலாம்.

அங்ஙனம் மெய்ப்பாட்டு (செய்கை) அடிப்படையில் எழுந்து பேச்சுமொழியாகிப் பின்னர் எழுத்து மொழியாக ஆக்கம் பெற்ற காலை அ, இ, உ இம்மூன்றும் அடிப்படையாக வரையறை செய்யப்பெற்றமை புலனாகும். இம்மூன்றும் அகரத்தின் முக் கோணங்களாக அமைந்துள்ளமையையும் கருதுதல் வேண்டும்

இருதிணை ஐம்பால் சுட்டுப் பெயர்கள்

அவன் இவன் உவன்	அது இது உது
அவர் இவர் உவர்	அஃது இஃது உஃது
அவர் இவர் உவர் (கள்)	அவை இவை உவை (கள்)
	அவ் இவ் உவ்

இச்சுட்டுப் பெயர்களுள் சுட்டெழுத்துக்கள் இடங்களையும் இறுதிநிலைகள் திணை பால்களையும் குறித்து நிற்பதை அறிய லாம். (இறுதிநிலைகளை இனி விகுதி என்னும் குறியீட்டான் உணர்வோம்) இவற்றில் உள்ள விகுதிகள் முறையே அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, வை, வ் என்பனவாகும், இஃது, இஃது, உஃது என்பனவற்றுள் உள்ள ஆய்தம் விரித்தல் விகா ரம் பற்றிப் புணர்ச்சியிலக்கண முறையான் அமைந்ததாகும். இனி இவ்விகுதிகளுள் வ், வை என்பவை தவிர்ந்தவை அவ்வப்பால் பற்றிவரும் வினைமுற்றுக்களின் இறுதியாக அமைந்துவருதலை யும் காணலாம். எனவே அவை அவ்வப்பாற் பொருள்களைக் குறித்து நிற்கும் பெயர்ச்சொற்களின் திரிபுகள் அல்லது மருஉக் கள் என்பது புலனாகும். எனவே ஆவற்றின் மூலச்சொற்கள் யாவை என்பது பற்றி இனிக்காண்போம்.

உயர்திணை முப்பால் என்பவை ஆடூஉ, மகடூஉ அவ்விரண் டன் பன்மை என்பது அறிந்தே. ஆக ஆடூஉவின் குறியீடே அன், ஆன், மகடூஉவின் குறியீடே அள், ஆள்; அவற்றின் பன்மை அர், ஆர் என்பனவாகும். ஆடூவிற்குரிய அடிப்படைப்பெயர் ஆண்மகடூ விற்குரிய அடிப்படைப்பெயர் ஆள். அவற்றுள் ஆண் என்பதன் திரிபே அன் எனல் தகும். ஆள் என்பதன் குறுக்கமே அள் என்பது தெளிவு. இனி, அர், ஆர், என்பவை அவ்இருபகுதியையும் குறித் தலான் (இரு) ஈர் என்பதன் திரிபாக ஆக்கம் பெற்றன எனக் கொள்ளலாம். அவை, அ+அன்=அவன்; அ+அள்=அவள்;

அ+அர்=அவர் என வகர உடம்படுமெய்பெற்று ஒருமொழிப் புணர்ச்சியவாகலின் வகரம் இரட்டாமல் புணர்ந்து அமைந்துள் ளன.

இனி, அது, இது, உது என்னும் அஃறிணை ஒருமைக்கண் அமைந்துள்ள து என்னும் இறுதி உடைமைநிலையை உணர்த்தி வரும் ஓர் உரியடியாகும். அப்பொருளினை நோக்கியே இதனை ஆறாம் வேற்றுமை உருபாகவும் குறிப்புவினை முற்றுவிகுதியாக வும் கொண்டனர் என்பது புலனாகின்றது. அஃறிணை ஒருமை வினைமுற்று விகுதியாக அமைந்ததற்கும் அதுவே காரணமாகும். எனவே து என்னும் விகுதியே சுட்டிடைச்சொல்லைச் சார்ந்து அஃறிணை ஒருமைச் சுட்டுப்பெயராக ஆக்கம் பெற்றுள்ளன.

அவை, இவை, உவை, அவ், இவ், உவ் என்னும் அஃறி ணைப் பன்மைச்சுட்டுப்பெயர்ாக உள்ள வை, வ் என்பன ஒருமைச் சுட்டுப்பெயரை ஒப்ப வினை விகுதியின் திரிபாக அமைந்தவையே யாகும். அஃறிணைப் பன்மை வினைமுற்று விகுதிகள் அ, வ என்பன வாகும். அவற்றுள் அகரம் புணருமிடத்து வகர உடம்படுமெய் பெற்று அவ என்றாகும். மலையாளத்தில் அவ என்பதே பன்மைச் சுட்டுப் பெயராக உள்ளது. கன்னடத்திலும், தெலுங்கிலும் இவ் விகுதி முறையே அவு என்றும் ஆக்கமுற்றுள்ளது. அவ்வாறே தமிழிலும் அவை என ஐகார ஈறாக ஆக்கம் பெற்றுள்ளது எனல் தகும். மற்றொரு வடிவமாகிய அவ் என்பது புணர்மொழிகளைப் பிரித்துக்கொள்ளும் நோக்கில் அமைத்துக்கொண்டதாகத் தெரி கின்றது. அஃதாவது அவ்யானை-அவ்யானைகள், அம்மரம்-அம் மரங்கள் என்னும் புணர்மொழிகளுள் வருமொழிச்சொற்கள் ஒருமை யாயும் பன்மையாயும் நிலைமொழியாகிய சுட்டுவடிவ வேறுபா டின்றியும் நிற்றலான்-அவற்றைப் பிரித்துணர்த்துமிடத்து ஒருமை யாயின் அகரச்சுட்டிடைச் சொல்லாகவும், பன்மையாயின் அவ் எனப்பிரித்துச் சுட்டுப் பெயராகவும் கொள்ளல் வேண்டுமென அமைத்துக்கொண்ட இலக்கண அடிப்படையில் ஆக்கம் பெற்ற தாகக் கொள்ளலாம்.

அது இது என்னும் சுட்டுப்பெயர்கள் வருமொழி உயிர் வருமிடத்து இடையே ஆய்தம் பெறும் என அமைத்துக் கொண்டமைபோலச் சுட்டுச் சொற்கள் பன்மையைச் சுட்டுங்கால் அவ் எனப்பிரித்துக்கொள்ள வேண்டுமென இலக்கண நோக்கில்

அமைத்துக் கொள்ளப்பட்டதென்பது பொருந்தும். சுட்டுப்பெயர் களுள் உகரச்சுட்டின் வழியமைந்த பெயர்கள் அருகிவழங்கும் சில பயிலப்படாமல் ஒழிந்தன. அ, இ, உ என்பவை செய்யுளுள் நீண்டும் அன்றி இன்றி எனத்திரிந்தும் வரும். இது என்னும் பெயர் ஈது எனவும் வரும்.

இனிச்சுட்டெழுத்துக்களின் அடிப்படையில் அமைந்த இடப் பெயர், குணப்பெயர் உறவுப்பெயர்களைக் காண்போம்.

இடப்பெயர்கள்

அங்கு இங்கு உங்கு	ஆங்கு ஈங்கு ஊங்கு
ஆண்டு ஈண்டு ஊண்டு	ஆண்டை, ஈண்டை, ஊண்டை
அம்மை இம்மை உம்மை	அம்பர் இம்பர் உம்பர்
அவண் இவண் உவண்	ஆன் ஈன் ஊன்
அதோளி இதோளி உதோளி	அணி இணி உணி

என்பவை இடங்குறித்துவருவன. இவற்றுள் முதனிலையாக உள்ள சுட்டு எழுத்துக்கள் சேய்மை அண்மைகளை உணர்த்தி நிற்க எஞ்சிய பகுதிகள் இடமாகிய பொருளை உணர்த்த அமைந்தனவாதல் வேண்டும்.

இடம் என்பது குறிப்பிடப்படும் ஓர் ஆதாரமேயன்றி வரையறுக்கப்படுவதோர் பொருளன்மையரன் சுட்டிக்கூறு வோனது மெய்ப்பாட்டுச் செய்கையானும் குறிப்பொலியானும் அவ்விடப்பெயர்கள் அமைந்துள்ளன. அஃதாவது ஆ, ஈ, ஊ என இடங்குறித்தெழுந்த உயிரிசையை அவ்வவ் இடம் நோக்கி முடித் தற்கண் வந்த துணை அசைகளாக அவை அமைந்துள்ளன.

ஆன், ஈன் என்பவற்றின் னகரம் வயின் என்பதன் குறி யீடாக அமைந்துள்ளது எனத்தெரிகின்றது. அவண், இவண் என்பவை முதற்கண் தன்மையை உணர்த்திப் பின் இடப்பொருளி லும் பயில்வனவாயின எனத் தெரிகின்றது. அவற்றுள் அமைந் துள்ள வண் என்பது வண்ணம் என்பதன் குறைவடிவமெனக் கருதலாம்.

அங்கு இங்கு என்பவற்றின் இறுதி கண் என்னும் இடப் பொருளுருபின் திரிபாகலாம். அ கள் - அங்கள் ஆங்கு - ஆங்கு என அமைந்ததாகல் வேண்டும். ஆண்டு ஈண்டு என்பதன்கண் உள்ள

இறுதி பொருட்குறியீடாகிய ஆன் ஈன் என்பவற்றொடு இணையு மிடத்து மயக்கநிலைக்கேற்ப ஆன் து ஆண் து ஆண்டு ஆண்டை என அமைந்ததாகல் வேண்டும். அம்மை இம்மை என்பவற்றின் இறுதி மண் என்பதன் மரூஉவெனத் தெரிகிறது. அ மண் அம் மண் அம்மை என்றாதல் மொழியாக்க இயல்பிற்கு மாறானதன்று. அவ்வாறே அம்பர் இம்பர் என்பவற்றின் இறுதிநிலையாகிய பர் என்பது நிலம் எனப்பொருள் தரும் பார் என்னும் பெயரின் சுருக்கமே எனக்கொள்ளலாம்.

அதோளி இதோளி என்பவை சுட்டு முதலாகிய இகர இறுதி தொல். எழுத்.) என்னும் தொடருக்கு உரையாளர்களான் காட்டப்பட்டனவாகும். கலித்தொகையுள் ஈதோளி என்பதொரு சொல்லாட்சி காணப்படுகிறது. பிற இலக்கியங்களில் பயிலப்படவில்லை. மற்று தொல்காப்பியம் "சுட்டு முதலாகிய இகர இறுதி" என்கிறது. அதோளி என்பதில் சுட்டுப்பெயர் முதலாக உள்ளது. எனவே இது தொல்காப்பியம் சுட்டும் இடச்சொல்லாகத் தெரியவில்லை. இச்சொல் அது என்னும் சுட்டுப்பெயரொடு இடப்பொருள் தரும் ஏழாவதன் சொல்லுருபாகிய உள் என்பது கூடி அதோள் என ஆகிப் பின் இகரவிகுதி சேர்ந்து அதோளி என ஆக்கமுற்றதாகத் தெரிகின்றது. இனி அ அள் என்பவை தகர ஒற்றினை எழுத்துப்பேறாகக் கொண்டு அதோள் என ஆகியிருக்கலாம் என அமைதி கொள்ளலுமாம்.

குணப்பெயர்— காலப்பெயர்

அன்ன இன்ன உன்ன
அனைய இனைய உனைய
அற்று இற்று உற்று
அனைத்து இனைத்து உனைத்து
ஆகிய குணம் சுட்டுவன — இவை தன்மை ஒப்பு இயல்பு அளவு ஆகியபொருள் பற்றி நிற்கும்

அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம்
ஆங்ஙனம் ஈங்ஙனம் ஊங்ஙனம்
அன்னணம் இன்னணம் உன்னணம்
அன்று இன்று உன்று
அற்றை இற்றை உற்றை
அளி இளி உளி — இவை காலப்பொழுதினைச் சுட்டுவன

ஆங்கு ஈங்கு ஊங்கு என்பவை ஒரோவிடத்துக் காலஞ்சுட்டிவருத லும் உண்டு.

அன்ன அனைய என்பவற்றின் ஈற்றுஅகரம் ஒப்புணர்த்தி நிற்றலின் அகரத்தை ஒப்புருபாகக் கொண்டு புறனடையில் அடக்கலாம். அன்று இன்று அற்று இற்று அனைத்து இனைத்து என்பவற்றின்கண் உள்ள று து என்பவை பொருட்குறியீடாகிய 'து' என்பதேயாம். இவற்றுள் அன்ன, அனைய, அற்று, அனைத்து என்பவை பெயர்ப்பொருளை வினைக்குறிப்பு மொழியாக நின்று சுட்டும். அவ்வாற்றான் அவ் அகரமும் துவ்வும் அது என்னும் ஆறன் உருபின் கூறாக அமைந்தனவாகக் கொள்ளலாம்.

அங்ஙனம் ஆங்ஙனம் முதலியவற்றுள் அன் ஆன் என்னும் முதனிலை தவிர்ந்த இறுதிநிலை ஙனம் என நிற்கின்றது. ஞகரம் மொழி முதலாக அமையாமையான் அஃது வேறொரு சொல்லின் திரிபென்பது வெளிப்படை. இச்சுட்டுப்பெயர்கள் நிலைமொழி வருமொழிகளாக அமைந்த தொகை மொழிகள் அல்லவென்பதும் அவன் இவன் என்றாற்போல ஒருமொழிப் புணர்ச்சி என்பதும் உளங்கொளற்பாலது. மற்றும் இவை அவன் அவள் என்பவற்றின் இறுதிநிலை பாலுணர்த்துமாறு போலாமல் ஆங்கு ஆண்டு என்றாற்போல மருவி நிற்பவை என்பதையும் காணல் வேண்டும். இவற்றை மொழியாக்க நெறிப்படி நோக்காமல் வரிவடிவை மட்டும் நோக்கி இடைக்கால நூலோர் அ ஞனம் ஆ ஞனம் எனப் பிரித்து விதிகூறிச் சென்றனர். அவர் 'ஙனம்' என்பதற்குத் தன்மை எனப்பொருள் கொண்டனர். உரையாளரும் பிறரும் அவ்வாறே கொண்டு அமைவராயினர். யாவரும் முதனிலையைத் தனிச்சுட்டெழுத்தாகவே கொண்டனர். அ ஙனம் என்பவை அங்ஙனம் எனப்புணருமேனும் ஆ ஙனம் என்பவை ஆங்ஙனம் எனப் புணர்தல் இலக்கண மரபாதலில்லை. என்னை?நெடிலின் பின்வரும் மெல்லினம் மிகுமென்னும் விதியின்மையான் என்க. மற்று ஒரு சாரார் ஙனம் என்பது கனம் என்ற சொல்லின் திரிபென்பர். கனம் என்பதற்குத் தன்மை எனப்பொருள் கொள்வார். கனம் என்பது தன்மைப்பொருளில் வருதல் இருவகைவழக்கினும் காணுமா றில்லை. எனவே ஒருசாரார் 'தனம்' என்பதன் திரிபே ஙனம் எனத்திரிந்தது எனக்கொள்வர். இக்குழப்பங்கட்கெல்லாம் காரணம் இச்சுட்டுப் பெயர்களை இருமொழிப் புணர்ச்சியாகக் கொண்டமை யேயாம்.

இனி அங்ஙனம் ஆங்ஙனம் என்பவை பயின்றுவருமிடங்களை நோக்கின் அவை அவ்வாறு, அப்படி என அளவைப் பொருள்படவும், ஒப்புப்பொருள் படவும் நிற்றலைக் காணலாம். 'கனம்' என்பதற்கு 'அளவு' என்பதும் பொருளாகலின் அன் கனம் ஆன் கனம் என்னும் சொற்கள் தம்முன் இணைந்து ஒருசொல்லாக மருவுமிடத்து அங்ஙனம், ஆங்ஙனம் என ஒலி நயம்பட அமைந்தன எனக்கோடலே நேரிதாகும்.

மற்று இங்ஙனம் ஒரு சொல்லாக மருவாமல் சிறுபான்மை ஆங்கனம் எனவும் நிற்கும். அவ்வழி அதனை இருமொழிப்புணர்ச்சியாகக் கோடலே நேரிதாகும்.

அன்னணம் இன்னணம் என வருவனவற்றுள் அணம் என்னும் இறுதிநிலை வண்ணம் என்னும் தன்மைப்பொருளுணர்த்தும் சொல்லின் மரூஉவாகலாம்.

அன்று, இன்று எனப் பொழுது சுட்டிவரும் பெயர்கள் நாள் என்னும் பொருளுடைய ஞான்று என்னும் சொல்லின் இறுதி நிலையாகிய 'ன்று' என்பது சுட்டெழுத்தொடு கூடியமைந்தன வாகும். ஞான்று என்பதற்கு நாட்பொழுது என்பது பொருள் என்பது வெளிப்படை. அற்றைஇற்றை என்பவை ஒன்று ஒற்றை ஆண்டு ஆட்டை என அமைந்தாங்கு அமைந்த திரிசொற்களாகும்.

அனி இனி உனி என்பவற்றுள் 'இனி' என்பது மட்டுமே தொல்காப்பியத்துள் கூறப்பட்டுள்ளது. அஃது, இன் என்னும் சுட்டுப்பெயரொடு குறிப்பாற் காலமுணர்த்தும் இகரம் சேர்ந்த வடிவாகத் தெரிகின்றது. அங்கு, ஆங்கு முதலியவை அன் ஆன் என்னும் சுட்டுக்களொடு ஏழாம்வேற்றுமை உருபாகிய 'கண்' என்பது கூடிமருவிய வடிவமாகும். அங்கு ஆங்கு என்பவை பெரும்பான்மை இடத்தையும் சிறுபான்மை காலத்தையும் உணர்த்திவரும்.

கிளை (உறவு) ப்பெயர்கள்

எமன், நுமன், தமன் - எமர், நுமர், தமர் என்பவை மூவிடப்பெயர்களின் அடிப்படையில் அமைந்தவையாகும். இவற்றின் முதனிலையாகிய எம், நும், தம் என்பவை ஒருமையீறு பன்மையீறு ஆகிய இரண்டினையும் ஏற்றுவருதலின் இவற்றைப் பிரித்துப் புணர்ச்சி விதிகாணுதல் கூடாது என விதித்தனர் நூலோர்.

எல்லாம்-எல்லீர்-எல்லார் என்னும் பன்மைப் பெயர்கள்

'எல்' என்னும் முதனிலையைக் கொண்டு மூவிடப்பெய ராக ஆக்கம் பெற்ற எல்லாம், எல்லீர், எல்லார் என்னும் சொற் களின் அமைப்பினை நோக்குமிடத்து எல்லீர், எல்லார் என்பவை முறையே முன்னிலைக்கும் படர்க்கைக்கும் உரியவை என்பது அவற்றின் இறுதிநிலைகளான் புலனாகும். அவற்றுள் படர்க் கைப்பெயர் உயர்திணைக்கே உரியது. ஏனைய முன்னிலைப் பெயர்களைப் போன்றே முன்னிலைப்பெயர் இருதிணைத் தன் மைப் பன்மைக்கும் வரும். எஞ்சிய எல்லாம் என்பது உயர்திணைத் தன்மைப் பன்மைக்கும் அஃறிணைப் படர்க்கைப் பன்மைக்கும் வரும் என்பதும் தொன்னூலோர் கொள்கை. இடைக்காலத்தே அந்நெறியினின்றும் ஒரோவிடத்துப்பிறழ்ந்த ஆட்சிகளைவழுவமை தியாகக் கொண்டனர் தொல்காப்பிய உரையாசிரியர். நன்னூல் முதலியவை அதனை வழாநிலையாகக் கொண்டு விதி கூறிச் சென்றன. எல்லாம் என்பது உயர்திணை மூன்றிடத்திற்கும் பொதுவாயின் எல்லீர் எல்லார் என்பவை மிகையானவையாம். அவை மிகையாகா எனின், தன்மைக்கண் வரும் சொல்லிற்குத் தன்மைக்குரிய விகுதியாகக் கொள்ளலாமெனின் அஃது அஃறி ணைப்படர்க்கைப் பன்மைக்கும் உரியதாக உள்ளமையின் அங் ங்னம் கொள்ளற்கியலாமையறியலாம். இத்தடுமாற்றம் காரணமா கத் தோன்றியதே 'எல்லேம்' என்னும் படைத்து மொழி கிளவி என்பது தெரிகின்றது. இடைக்காலநூலோர் இங்ஙனம் வழுவிய மைக்குக் காரணம் தன்மை இடத்தை இருதிணைப்பொதுவாகக் கொண்டமையேயாம்.

இனி முதனிலையாக நிற்கும் 'எல்' என்பதனைப் பற்றிக் காண்போம். 'எல்' என்பதில் உள்ள எகர உயிர் எது எவன் எவள் எவை என்பவற்றைப் போல வினாப்பொருளைக் குறியா மல் அ இ உ என்னும் சுட்டிடைச் சொற்களான் உணத்தப்படும் பெயர்ப்பொருள்களை இடப்பொதுவாய் நின்று அவற்றை ஒழுங்கு அகப்படுத்திச் சுட்டின் பயத்ததாக நிற்றலைக் காணலாம். அந் நிலைமையை நோக்கித் தொன்னூலார் இவ் எகரத்தை எஞ்சாப் பொருள் தரும் உரிச்சொல்லின் அடியாகக் கொண்டு பன்மைக் குறிப்புடைய லகர ஒற்றினைக் கூட்டி 'எல்' என ஆக்கஞ் செய்தனர் என்பது தெரிகின்றது. லகரம் பன்மைக் குறிப்புடையது என்பதனைப் பல், சில் என்னும் தொகுதிப்பெயரானும் (பல் து பற்று) பத்து என்னும் எண்ணுப்பெயரானும் அறியலாம். துளி துளியாகப் பல்குதல் காரணமாகவே அப்பெயர் அமைவதாயிற்றுப் போலும்.

முற்றும்

சிலம்பில் பயண இலக்கியக் கூறுகள்

முனைவர் தா. ஈசுவர பிள்ளை

தமிழ் இலக்கிய உலகில் காலத்தின் தேவைக்கேற்பவும், மக்களின் உள்ளப்பாங்கிற்கேற்பவும் பலவகையான இலக்கிய வகைகள் அரும்பி மலர்ந்து தமிழ்மொழியை வளப்படுத்துகின்றன. இவ்வகையில் உருவாகியுள்ள இலக்கியங்களைச் சிற்றிலக்கிய வகை என்ற பாகுபாட்டினுள் அடக்கிக் காட்டுவர். இச்சிற்றிலக்கியங்கள் 96 என்ற எண்ணிக்கையிலிருந்து முந்நூறுக்கும் மேற்பட்டுப் பல்கிப் பெருகியுள்ளன. ஆனால் பெரும்பான்மையான சிற்றிலக்கிய வகைகளின் கரு சங்க இலக்கியத்துள்ளும் பக்தி இலக்கியத்துள்ளும் இடம்பெறுமாற்றை உய்த்துணர முடிகின்றது. மேலும் ஓர் இலக்கியவகையுள் பிற இலக்கிய வகையின் கூறுகள் உள்ளடக்கிக் காணப்பெறுமாற்றையும் அறிய முடிகிறது. அவ்வகையில் சிலப்பதிகாரத்தை நோக்கும்போது அதில் அடங்கியுள்ள சில சிற்றிலக்கிய வகையுள் பயண இலக்கியம் என்ற இலக்கிய வகையின் கூறுகளும் இடம் பெறுமாற்றைப் புலப்படுத்தும் முயற்சியாக இக்கட்டுரை அமைகின்றது.

பயண இலக்கியம்

பயணம் அல்லது சுற்றுலா என்பது குறித்து அறிஞர் பல்வேறு விளக்கங்கள் அளிக்கின்றனர். அவற்றுள் சுற்றுலா எனப்படுதல் ஒரு குறிப்பிட்ட புவியியல் எல்லையைத் தாண்டியோ, நாட்டிற்குள்ளேயோ இருக்கின்ற மக்களுக்கிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தக் கூடிய பயனுள்ள மனித நடவடிக்கை ஆகும் என்று அப்துல் வகாப் என்பவரும், ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செல்லல், அவ்விடத்தைச் சாராத மக்கள் அவ்விடத்தில் சிறிது காலம் தங்குதல், ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிருக்காமை, பொருளீட்டாமை போன்றவற்றுடன்

தொடர்புடைய செயல்களின் கூட்டுத் தொகையே சுற்றுலா ஆகும் என்று மதுரை காமராசர் பல்கலைக் கழக அஞ்சல்வழிக் கல்விக் குறிப்பு நூலும் சுட்டுகின்றமையை எடுத்துக் காட்டுவர் (வெ. கிருட்டிணசாமி, சுற்றுலா வளர்ச்சி, பக். 12,13) இக்கருத்திற் கிணங்கப் பல்வேறு இடங்களுக்கும் பயணம் செய்தோர் தாம் கண்ட வியத்தகு காட்சிகள், சுட்டிக்காட்டத்தக்க சிறப்புமிக்க செய்திகள், தமக்குற்ற அனுபவங்கள் ஆகியனவற்றைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் பயண இலக்கியங்கள் பலவற்றைப் படைத்து வருகின்றனர்.

பொதுவாக இப்பயணங்கள் உயர்வு, உவகை, இறைவழிபாடு, வணிகம், பொருளீட்டல், பொழுதுபோக்கு என்ற காரணங்களுக்காக நிகழ்தல் உண்டு. பயணத்தின் பயன்களாக மனித நேயம் வளர்தல், பண்பாட்டு வளர்ச்சி, யாவரும் கேளிர் என்ற உணர்வு வளர்ச்சி என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

சிலம்பில் பயண இலக்கியக் கூறுகள்

நாடகக் கணிகை மாதவிபால் கொண்ட காதலால் கண்ணகியைப் பிரிந்து மாதவியுடன் இன்ப வாழ்க்கை வாழ்ந்த கோவலன் இடையில் அவளிடம் ஊடல் கொண்டு அவளைப் பிரிந்து மீண்டும் கண்ணகியை அடைகின்றான். சலம்புணர் கொள்கைச் சலதியுடனாடிக் குலந்தரும் வான்பொருள் குன்றம் தொலைத்தமையை எண்ணி நாணம் கொள்வதாகக் கண்ணகியிடம் கூறுகின்றான். கண்ணகியும் தன்னிடம் இருந்த காற்சிலம்புகளுள் ஒன்றைக் கழற்றிக் கொடுக்கின்றாள். கோவலன் இந்தக் காற்சிலம்பை விற்றுப் பொருள் பெற்று இழந்த பொருளை மீட்பதாகக் கூறிக் கண்ணகியையும் அழைக்கின்றான். கண்ணகியும் உடன் செல்கிறாள். இவண் கோவலனும் கண்ணகியும் புகார் நகர் விட்டு நீங்கி, இடையில் கவுந்தியடிகளுடன் சேர்ந்து மதுரை நகர் வரையிலும் பயணம் செய்தமையை இளங்கோவடிகள் நம் கண்முன் விளக்கிக் காட்டுமாற்றைக் காணலாம்.

கடந்து சென்ற இடங்கள்

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் புகார் நகரை விட்டு மதுரை நகர் செல்வது வரையிலும் பல்வேறு இடங்

களைக் கடந்து சென்றுள்ளனர். புகார் நகரம், மதுரை நகரம் ஆகியவற்றின் மதில்களையும், இலவந்திகைச்சோலை, கவுந்தி யடிகள் பொருந்தியுள்ள பள்ளியின் பக்கமுள்ள சோலைகளையும் குளங்களையும், ஏரிகளையும், காவிரி, வையை போன்ற ஆறு களையும், அங்காடி வீதி, இரத்தினக்கடை வீதி, புடவைக்கடை வீதி, பொற்கடை வீதி, கோயில் வீதி, அரசரும் செல்வரும் விரும்பும் வீதி, அரசர் வீதி, வேளாளர் வீதி, பதியிலார் வீதி, நாற்சந்தி, முச்சந்தி, குறுந்தெரு, முடுக்கு ஆகியனவற்றையும் அகழிகள், அரிய வழிக்கலப்புக்கள், கற்பாறைகள், காவற்காடு கள், சிறுமலைகள், சுரநெறிகள், கருங்கை வழிகள், மன்றுகள், வெம்மை நிறைந்த மூங்கில்கள் கருகிக் கிடக்கும் காடுகள் ஆகி யவற்றையும், அந்தணர் உறைவிடங்கள், சாவகர் உறைவிடங் கள், பட்டினப்பாக்கம், புறஞ்சேரி முதலிய இடங்களையும், இடை யிடையே பழமை பொருந்திய மூதூர்களையும் கடந்து மதுரை நகர் வந்து அடைந்தமையை இளங்கோவடிகள் வருணித்துக் காட்டுகின்றார்.

வணங்கிய கடவுளர்களும் இடங்களும்

பயணம் மேற்கொண்டபோது அவர்கள் அருகதேவன், சிவபெருமான், திருமால், பலராமன், முருகன் ஆகிய கடவுளர் களையும், இந்திரன் ஆக்கிய ஏழு விகாரங்களையும், ஐயைக் கோட்டத்தையும், சிலாவட்டத்தையும், முனிவர் பள்ளிகளையும் வணங்கிச் சென்றமையை இளங்கோவடிகள் எடுத்துக்காட்டு கின்றார்.

வழியில் சந்தித்தோர்

கோவலனும் கண்ணகியும் மதுரை செல்லும் பயணம் தொடங்கியபோது முதலில் கவுந்தியடிகளைச் சந்திக்கின்றனர். பின்னர் மூவரும் பயணம் மேற்கொள்ளும்போது சாரணர், வம்பப் பரத்தையர், வறுமொழியாளன், நிக்கந்தன் பள்ளி முனிவர், மாங்காட்டு மறையவன், வயந்த மாலை வடிவில் வந்த கானுறை தெய்வம், தெய்வமுற்ற சாலினி, கோசிகன், பாணர்கள், மாதரி ஆகியோரைச் சந்திக்கின்றனர்.

வழியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள்

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மேற் கொண்ட பயணத்தினிடையே பல்வேறு நிகழ்ச்சிகள் நிகழ்ந்த

போதும் காப்பியக்கதைப் போக்கிற்கு இயைந்தனவாகவும் காப்பியப் போக்கிற்கு வலுவூட்டுவனவாகவும் பாத்திரப்பண்பை விளக்குவனவாகவும் அமைகின்ற நிகழ்ச்சிகளாக வம்பப்பரத்தையும் வறுமொழியாளனும் கவுந்தியடிகளிடம் சாபம் பெற்றுப் பின் கோவலன், கண்ணகி வேண்டுதலுக்கிணங்கச்சாப விடை பெறுதல், சாரணரிடம் அறிவுரை கேட்டல், நிகந்தம்பள்ளி முனிவர்க்குக் கவுந்தியடிகள் அறிவுரை கூறல், சாலினி தெய்வமுற்றுக் கண்ணகியைப் போற்றுதல், கோசிகன் கோவலன் பண்பு நலன் களைப் புகழ்தல், கவுந்தியடிகள் கோவலனுக்கு அறிவுரை கூறுதல் என்பன சுட்டுதற்குரியன ஆகும்.

ஒலிகள்

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகியோரின் மதுரைப் பயணத்தின்போது அவர்கள் கேட்ட ஒலிகளாக இளங்கோவடிகள் உழவர் ஓதை, ஏர்மங்கலப்பாட்டு ஒலி, கடைசியர் ஒலி, காட்டுக் கோழியின் கனை குரல், காலை முரசின் ஒலி, காவிரியாற்றின் ஒலி, கிணைப் பொருநர்களின் குழலோசை, பறவைகளின் ஒலி, முகவைப் பாட்டொலி ஆகியவற்றை வெளிப்படுத்துகிறார்.

பயணம் செய்த காலம்

மூவரும் குறிஞ்சியும், முல்லையும், முறைமையின் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறும் பாலை என்பதோர் படிவம் கொள்ளும் காலையில் பயணம் மேற்கொண்டமையை இளங்கோவடிகள் சுட்டுகின்றார். எனவே வெயிலின் வெம்மை தாங்க மாட்டாது வைகறைப் பொழுதிலும் சந்திரனாகிய விளக்கின் துணைகொண்டு இரவுப் பொழுதிலும் மட்டுமே பயணத்தைத் தொடர்கின்றனர். பகற்பொழுதில் இளமரக்கா, ஊர்கள் ஆகிய இடங்களில் இளைப்பாறிச் சென்றனர்.

பயண வகை

மூவரும் பயணம் மேற்கொண்ட வகை நடைப்பயணமாகவே அமைந்துள்ளது. ஒரு நாளில் ஒரு காவத தூரம் நடந்து சென்றனர். ஆனால், காவிரியாற்றின் நீர்த்துறையைப் பெரிய பள்ளி ஓடத்தில்ஏறிக் கடக்கும் காட்சியும் விளக்கப்பெறுதல் ஈண்டு சுட்டுதற்குரியது. இவர்கள் மேற்கொண்ட பயணம் பொருளீட்டும் நோக்கம் கொண்டது ஆகும்.

முற்கூறியவாறு இளங்கோவடிகள் கோவலன், கண்ணகி கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மேற்கொண்ட மதுரைப் பயணத்தை நம் கண்முன்னர் நாடுகாண் காதை, காடுகாண் காதை, அடைக்கலக்காதை என்ற மூன்று காதைகளின் வாயிலாக விளக்கிக்காட்டுகின்றார்.

காப்பியப் போக்கில் இப்பகுதியின் இன்றியமையாமை

சிலப்பதிகாரக் காப்பியப் போக்கினூடே இடம்பெறும் மதுரை நகரப் பயண விளக்கம் கூறும் இப்பகுதி மூலம் கண்ணகி, கோவலன் இருவருடைய அன்பின் பிணைப்புகளையும், சமயக் கொள்கைகளின் விளக்கங்களையும், கணிகையர் குலத்திற் பிறந்த மாதவியின் உயர்ந்த உள்ளப் பாங்கினையும், கோவலன் பெற்றோர்களிடம் கொண்ட அன்பின் ஆழத்தினையும், கோவலனின் பிறர்க்குதவும் கொடைப் பண்பினையும் விளக்கிக் காட்டுகின்றார். மேலும், விரைவில் கொலையுண்ணப் போகும் கோவலன் மேல் அவன் கண்ணகியைப் பிரிந்தமையால் கற்போருக்கு ஏற்பட்ட கோப உணர்வு நீங்கி உயர் மதிப்பை ஏற்படுத்தவும், பாண்டிய மன்னனின் நீதி தவறாத ஆட்சியை நினைப்பூட்டவும், கண்ணகி தெய்வ நிலையை அடைவதை முன்கூட்டியே சாவினி வழி உணர்த்தவும், அவர்களுக்கு நிகழவிருக்கும் துன்பத்தை வையையாறு மூலமும் மதிற்கொடிகள் மூலமும் தற்குறிப்பேற்றம் பட வருணிக்கவும் இப்பகுதி இளங்கோவடிகளுக்கு மிகவும் துணை நிற்கின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாக இளங்கோவடிகளின் வருணனைத் திறத்திற்கும், கற்பனை வளத்திற்கும், இலக்கிய வளத்திற்கும் உரைகல்லாக இப்பகுதி திகழ்கின்றது. மேலும், காப்பியத்தைப் படிப்போர் சுவை மாற்றத்திற்கும் துணை நிற்கின்றது.

இவ்வகையில் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பயண இலக்கிய வகையின் சில கூறுகளைக் கையாண்டு இன்றமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை மேலும் சுவைபட ஆக்கியுள்ளார் எனலாம். மலையாளத் தூது நூல்களின் தூதுவன் பயணம் செய்யும் காட்சி பெரும்பகுதியாக விளக்கப் பெறுதல் இவண் குறிப்பிடத்தக்கது.



இளம்பூரணமும் சேனாவரையமும்

டாக்டர். சா. கிருட்டிணமூர்த்தி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

உரை மறுத்தல்

இளம்பூரணர் நூற்பாவிற்கு ஆற்றொழுக்காக உரைகொண்டு நேரிய பொருளைத் தருவர். அவ்வுரையினின்றும் தாம் வேறுபடு மாற்றை அதனை மறுத்துரைப்பதன் மூலம் வெளிப்படுத்துவர் சேனாவரையர்.

> ''பால்மயக் குற்ற ஐயக் கிளவி
> தானறி பொருள்வயின் பன்மை கூறல்''

என்ற நூற்பாவில் இன்னதிணைக்குப் பன்மை கூறவேண்டும் என்று கூறப்படவில்லை. ஆயினும் 'உயர்திணைப் பால் ஐயத் திற்குப் பன்மை கூறவந்தது இந்நூற்பா' என்பதை ''உயர்திணைப் பாலையத்துக்கண் சொல்நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று'' என்று கூறுவர் இளம்பூரணர். அதைப்போன்று,

> ''உருபென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
> இருவீற்று முரித்தே சுட்டுங் காலை''[41]

என்ற நூற்பாவும் திணைஐயம் பற்றியதா பால் ஐயம் பற்றியதா என்பது விளக்கப்படவில்லை. ஆயினும் இளம்பூரணர் உருவென மொழிதல் திணைஐயத்திற்கு வரும் என்று காட்டுவர். இவ்வாறு இளம்பூரணர் கூறிய உரையைச் சேனாவரையர் மறுப்பர். பன்மை கூறல் உயர்திணைப் பால்ஐயத்திற்கு உரித்தென்றும், உருபென் மொழிதல் திணைஐயத்திற்கு உரித்தென்றும் உரையாசிரியர் கூறினாரால் எனின் அவை அவற்றிற்கே உரியவாயின் அஃறி ணைப் பிரிப்பு என்றாற்போல் உயர்திணைப் பால் மயக்குற்ற என்றும், திணை ஐயத்து என்றும் விதந்தோதுவார் ஆசிரியர். அவ்வாறு ஓதாமையான் அவை போலியுரை என்க''[42] என்பது அவ்வுரை.

எனவே பால் மயக்குறுதல் என்பது உயர்திணைக்கு மட்டு மன்றி அஃறிணைக்குமுரியது என்பதும், உருபென்றுசொல்லுதல் திணை ஐயத்திற்கும் பால் ஐயத்திற்கும் உரியது என்பதும் சேனா வரையர் கருத்தாகின்றது இவற்றிற்கேற்பவே இவ்விரு நூற்பாக் களுக்கும் சேனாவரையர் உரைகண்டுள்ளார். தெய்வச்சிலையார், சேனாவரையரைத் தழுவி உரைசெய்வர். இவர், 'உருபு' என்று சொல்லுதற்குப் பதிலாக 'அது' என்று கூறுதலும் உண்டு என்பதற் கேற்ப எடுத்துக்காட்டும் தருவர்.

இயற்பெயரும் சுட்டுப்பெயரும் வினைக்கு ஒருங்கு நடப்ப தோர் காலம் தோன்றின் அங்கு இயற்பெயரை முற்கூறிச் சுட்டுப்பெயரைப் பின்னே கூற வேண்டுமென்ற நூற்பா பொருள் வழி வந்தது என்பர் இளம்பூரணர். அதுபோன்று இயற்பெயரின் வினைக்குக் காரணத்தைக் குறிக்க வரும் சுட்டை முதலாகவுடைய சொல்லையும் இயற்பெயரின் பின்னே வைத்துச் சொல்லவேண்டும் என்ற நூற்பாவும் பொருளின் குணத்து வந்தது என்பர். இக் கருத்தைச் சேனாவரையர் மறுக்கும்பொழுது, ''பொருள் பற்றாது பண்பு முதலாயின பற்றிவந்த சுட்டாதலின் வேறு ஓதப்பட்டது என்று உரையாசிரியர் கூறினார்'' என்று கூறுவர். இம் மறுப்பு முழுதும் இளம்பூரணர் உரையில் காணப்பெறவில்லை. இருப்பினும் இளம்பூரணர் கூறிய கருத்திற்குச் சேனாவரையர் இங்கு மறுப்புரைக்கின்றார். 'அதனால்' என்னும் சுட்டுப்பெயர் பண்பு பற்றி வந்தது என்ற இளம்பூரணர் கருத்தை மறுக்கும் பொழுது அவ்வகைச் சுட்டு பண்பு குறித்து மட்டும் வருவதில்லை யென்றும், 'அஃது' 'அதனை' போன்ற வேறு நிலைகளிலும் வருகின்றது என்பதால் பண்பு குறித்த சுட்டுப்பெயரை மட்டும் கூறினார் ஆசிரியர் என்று கூறுதல் குன்றக் கூறலாகும் என்றும் கூறுவர் சேனாவரையர்.

ஆயினும், சுட்டுமுதலாகிய காரணக்கிளவி என்பது இயற் பெயரின் பண்பைக் குறித்து நிற்கும் தன்மையதாகும். சேனா வரையர் காட்டுகின்ற 'சாத்தன், வந்தான் அஃது அரசற்குத் துப்பாயிற்று' என்பதும், 'கிழவன் பிரிந்தான், அதனைக் கிழத்தி உணர்ந்திலள்' என்பதும் இயற்பெயரின் பண்பை உணர்த்து மாறில்லை. முதல் தொடரில் அமைந்துள்ள சுட்டு எழுவாயாகவும் இரண்டவது தொடரில் அமைந்துள்ளது செயப்படுபொருளாகவும்

வ்ருகின்றனவேயன்றிக் காரணக்கிளவிகளாக வரவில்லை என்பது நன்கு விளங்கும். மேலும் சேனாவரையர் அவ்வகைச் சுட்டுகளைத் தன்னின முடித்தல் என்பதால் கொள்ள வேண்டும் என்பர். சுட்டு முதலாகிய காரணக்கிளவிக்குச் 'சாத்தன் கையெழுதுமாறு வல்லன் அதனால் தந்தையுவக்கும்' என்று இளம்பூரணர் எடுத்துக்காட்டுத் தருவர். இவ்வெடுத்துக்காட்டுள் 'அதனால்' என்ற சுட்டு காரணக் கிளவியாகத் தந்தை உவத்தல், சாத்தனின் கையெழுதும் குணம் கருதியே என்னும் பொருள்பட அமைந்துள்ளது. எனவே இளம்பூரணர் கூறியது போன்று இச்சுட்டு முதலாகிய காரணக் கிளவி பொருளது குணத்து வழி வந்தது என்பது பொருத்த முடையது எனலாம்.

''எவ்வயின் வினையும் அவ்வயின் நிலையும்'' என்ற நூற் பாவிற்கு இளம்பூரணர் காணும் உரையைச் சேனாவரையர் மறுத் துரைப்பர். ''முற்றுச் சொல்லேயன்றிப் பெயரெச்சமும் வினை யெச்சமும் மூன்று காலமும் மூன்றிடமும் உடையவாய் வினையும் வினைக்குறிப்பும் பற்றி வரும்'' என்று இந்நூற்பாவிற்குப் பொரு ளுரைப்பர் இளம்பூரணர். இதனைச் சேனாவரையர் ''முற்றுச் சொல்லேயன்றிப் பெயரெச்சமும் வினையெச்சமும் காலமும்இடமும் உணர்த்து மென்பது இச்சூத்திரத்திற்குப் பொருளாக உரைத்தா ரால் உரையாசிரியர் எனின், அவை இடவேறுபாடு உணர்த்தாது மூவிடத்திற்கும் பொதுவாய் நிற்றலின் அது போலியுரை என்க'' என்று மறுத்துரைப்பர். இம் மறுப்பு சிந்திக்கத்தக்கது. பெய ரெச்சமும் வினையெச்சமும் இடமும் காலமும் உணர்த்தா என்பது உண்மை. ஆயினும் அவை வினையும் வினைக்குறிப்பும் பற்றி வரும்பொழுது இடத்தையும் காலத்தையும் உணர்த்தும் தன்மை பெறுகின்றன. சான்றாகப் படிக்கும் நான், படிக்கும் நீ, படிக்கும் அவன் என்பதும், பாடிவந்தான், பாடி வருகிறான், பாடிவருவான் என்பதும் இடமும் காலமும் உணர்த்தும் என்பது வெளிப்படை. இவற்றுள் படிக்கும் நான், படிக்கும் நீ, படிக்கும் அவன் போன் றவை படித்தலாகிய தொழிலைச் செய்கின்ற தன்மை ஒருவனை யும், முன்னிலை ஒருவனையும், படர்க்கை ஒருவனையும் குறித்து நிற்கின்றன எனலாம். அதைப்போன்று பாடிவந்தான், பாடி வருகிறான், பாடி வருவான் போன்றவையும் பாடுதலாகிய தொழிலைச் செய்து வந்தான் என்று இறந்த காலத்தையும், பாடிக் கொண்டு வருகிறான் என நிகழ்காலத்தையும், வருவா

ன்ன எதிர்காலத்தையும் குறிக்கின்றன. எனவே பெயரெச்சமும் வினையெச்சமும் இடமும் காலமும் உணர்த்தாவாயினும் அவை வினையும் வினைக்குறிப்புமாக முடிக்கும் சொற்களைப் பெற்று வரும்பொழுது அவற்றிற்கேற்ப அவற்றை உணர்த்தும் தன்மையைப் பெறுகின்றன. அவை எச்சங்களாதலால் தனி நிலையில் இடத்தையும் காலத்தையும் உணர்த்துமாறில்லை; எனவேதான் அவை மூன்று காலமும் மூன்றிடமும் உடையவாய் வினையும் வினைக்குறிப்பும் பற்றி வரும் என்பர் இளம்பூரணர். இக்கருத்து ஏற்புடையதாகும் எனலாம். இது கருதியே நச்சினார்க்கினியரும் இளம்பூரணரைப் பின்பற்றினார்.

மேலும் சேனாவரையர் இந்நூற்பாவிற்குக் கொள்ளும் உரை பொருந்துமா என்பதும் ஆராயத்தக்கதாகும். இந்நூற்பாவிற்கு "மூவிடத்தாற் பொருள் தோறும் இவ்விரண்டாமென மேற் சொல்லப்பட்ட கட்டளையுட் பட்டடங்காது பிறாண்டு வரும் வினையும் முற்றியல்பாய் நிலையும்; எ.டு, யார், எவன், இல்லை, வேறு, உண்டு என்பன இடமுணர்த்தாமையின் மேற்கூறிய கட்டளையின் அடங்காது பிறாண்டு வந்தனவாம்" என்று உரை காண்பர். 'எவ்வயின் வினை' என்பதற்கு எச்சமென்று இளம்பூரணரும், குறிப்பு வினையென்று சேனாவரையரும் பொருள் கொண்டனர். மேலும் குறிப்பு வினைகள் இடமுணர்த்தாமை பற்றியே எடுத்துக்கொண்டனர் என்பர் சேனாவரையர். முன்னிலை, வியங்கோள், வினையெஞ்சு கிளவி, இல்லை, வேறு, செய்ம்மன, செய்யும், செய்த என்னும் சொற்கள் விரவு வினையாக வரும். இவற்றுள் முன்னிலை வினையொழித்த ஏனைய சொற்கள் மூன்றிடத்திற்கும் ஐந்துபாற்கும் உரியவாகும் என்று வினையியலுள் கூறப்பட்டுள்ளது. எனவே விரவுவினை முற்றின் இலக்கணம் வினையியலுள் கூறப்பட்டதால் இதற்குரிய இலக்கணத்தை மீண்டும் கூறத்தேவையில்லை. இதனால் 'எவ்வயின் வினையும்' என்பதற்கு விரவுவினை என்று பொருள் கொண்டு உரை காண்பதைவிட எச்சம் என்று இளம்பூரணர் கொள்ளும் உரை பொருந்துவதாகும் எனலாம்.

எவ்வகைப்பட்ட பொருளாயினும் தன்னிடத்து இல்லாததனை ஒருவன் கேட்டவிடத்து அதனை இல்லை என்று கூற

வேண்டுமெனின் கேட்பவன் கூறிய அப்பொருள் அல்லாத பிறிது பொருளைக்கூறி இல்லையென்று கூறவேண்டும் என்று,

''எப்பொரு ளாயினும் அல்ல தில்லெனின்
அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்''

என்னும் நூற்பாவிற்கு உரை காண்பர் இளம்பூரணர். அவ்வாறு கூறும்பொழுது இனப்பொருளே கூறவேண்டும் என்பது அவர்தம் கருத்து. இவ்வுரையைச் சேனாவரையர்,

அ. அல்லதில் வாய்பாடு

ஆ. இனப்பொருள் கூறுதலில்லை

எனும் இருவகையில் மறுப்பர்.

நூற்பாவில் உள்ள 'அல்லதில்' என்ற சொல்லை 'அல்லதில்' என்னும் வாய்பாடாகக் கொள்வர். 'அல்லதில்' என்பது தன்னிடத்துள்ளதல்லதை இல்லெனின்' என்று பொருள் கொள்ளாது; எனவே அதனை 'அல்லதில்' என்று ஒருசொல் நீர்மைத்தாகக் கொண்டுவாய்பாடாகக் கொள்ளுதல்தகும் என்பதே சேனவராயர் கருத்து. தன்னிடத்து இல்லாதபொருளை ஒருவன் இல்லையெனக் கூறக் கருதின் அதற்கு 'அல்லதில்' எனும் வாய்பாட்டைத் தேடி அதனைக் கொண்டுதான் கூறவேண்டுமென்பதில்லை. நூற்பாவிற்குரிய ஆற்றொழுக்கான பொருளாகிய 'தன்னுழையுள்ள தல்லதனை இல்லையெனலுறின்' என்று இளம்பூரணர் கொள்வது பொருத்தமுடையதாகலாம்.

'தன்னுழையுள்ளது அல்லதனை' என்று இளம்பூரணர் பொருள் கொள்ளும்பொழுது 'இல்லாததனை' என்றே அதற்குப் பொருள் கொள்ளலாம். அவ்வாறு கொள்ளுதலில் 'அல்லது' என்று ஆசிரியர் குறித்த பொருள் விளங்கவில்லை என்று கூறுவார் சேனாவரையர். எனினும் தன்னுழை இல்லாதது என்பதும், தன்னுழையுள்ளது அல்லது என்பதும் வேறுபாடுடையன. 'தன்னுழை இல்லாதது' என்பது தன் வணிகத்தோடு தொடர்பில்லாத பொருளையும், 'தன்னுழையுள்ளதல்லது' என்பது தொடர்புடைய பொருளையும் குறிப்பதாகும்; மேலும் தன்னிடம் இருந்து இப்பொழுது இல்லாததாகிய பொருள் என்றும் கொள்ளுதல் தகும். இவ்வாறு கொண்டால் 'அல்லதில்' என்பதை வாய்பாடாகக் கொள்ளத் தேவையில்லை என்பது புலனாகும்.

அவ்வாறு 'இல்லை'யென்று கூறும்பொழுது தன்னுழை இல்லாத பொருளின் இனப்பொருளைக் கூறி இல்லையெனக் கூற வேண்டும் என்பர் இளம்பூரணர். இனப்பொருள் கூறவேண்டு மென்பதைச் சேனாவரையர் மறுப்பர். அவர் அதற்கு இருவகையில் மறுப்புக் கூறுவர். ''பாம்புணிக் கருங்கல்லும் பயறும் விற்பான் ஒருவனுழைச் சென்று பயறுளவோ என்றவழிப் பாம்புணிக்கலல்ல தில்லையென்றால் இனப்பொருள் கூறாமையாற் பட்ட இழுக்கின் மையாலும் அவை போலியுரை என்க. அல்லதூஉம் இனப்பொருள் கூறுக என்பதே கருத்தாயின் 'அப்பொருளல்லா இனப்பொருள் கூறல்' என்னாது பிறிது பொருள் கூறல் என்னார் ஆசிரியர்; அதனாலும் அஃதுரையன்மையுணர்க' என்பது அவருரை. இதனுள் பிறிதுபொருள் என்பது இனப்பொருள் குறிக்காது பிறவற்றைக் குறிக்கும் என்பது சேனாவரையர் கருத்து. பிறிது என்பது ஒன்றின் வேறு என்று பொருள்படும். 'மற்றையது' என்ற சொல்லும் பிறிது என்ற சொல்லின் பொருளைக் குறிக்கும். மற்றையது என்ற இடைச்சொல்லின் இலக்கணத்தை,

''மற்றைய தென்னும் கிளவி தானே
சுட்டுநிலை ஒழிய இனங்குறித் தன்றே"

என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இதனால் மற்றையது என்ற சொல் வேறுபொருளைக் குறிக்காமல் அதன் இனமாகிய பொருளைக் குறிக்கின்றது என்பது பெறப்படுகின்றது. இன்றைய பேச்சு வழக்கிலும் 'வேறொன்று' என்ற சொல் ஒன்றன் இனமாய பொருளைச் சுட்டுகின்றது என்பதும் நன்கு விளங்கும். எனவே 'பிறிதுபொருள்' என்ற சொல் வினவப்பட்ட பொருளுக்கு இனமாகிய பொருளைக் குறிக்கின்றது என்ற இளம்பூரணர் கருத்து பொருத்தம் உடையது எனலாம். மேலும் 'இனப்பொருள் கூறலை மறுக்கும் சேனாவரையரும் தாம் எடுத்துக்காட்டும் எடுத்துக் காட்டில் பயறுளவோ என்று வினவினார்க்கு 'உழுந்தல்லது இல்லை, பயறல்லது இல்லை என்று இனப்பொருள் காட்டுதலான் சேனாவரையர் கூறும் மறுப்பு பொருந்துவதன்று என்று கூறுவர்.

''ஏவும் குரையும் இசைநிறை அசை நிலை
ஆயிரண் டாகும் இயற்கைய என்ப''

என்ற நூற்பாவிற்கு 'ஏ என்பது இசை நிறையாகவும் குரை என்பது அசை நிலையாகவும் வரும் என்று நிரனிறையாகக்

கொள்வர் இளம்பூரணர். இவ்வாறு ஏவிற்கு இசைநிறையையும் குரைக்கு அசை நிலையையும் நிரனிறையாகக் கொள்ளுதல் பொருந்தாது எனச் சேனாவரையர் அவ்வுரையை மறுத்துரைப்பர். நிரனிறையாகப் பொருள் கொள்ளுகின்ற தன்மை தொல்காப்பியத்துள் பிறிதொரு சூத்திரத்திலும் காணப்படுகின்றது.

''ஐ ஒள என்னும் ஆயீ ரெழுத்திற்கு
இகர உகரம் இசைநிறை வாகும்"

என்ற நூற்பாவிற்கு ஐகாரத்திற்கு இகரமும், ஒளகாரத்திற்கு உகரமும் இசைநிறையாக வரும் என நிரனிறையாகப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இந்நூற்பாவிற்குப் பொருள் நிரனிறையாகக் கொள்ள வேண்டும் என்று கூறுவதும் நோக்கத்தக்கதாகும். இதுபோன்று அமைந்ததே மேல்நூற்பா. எனவே அந்நூற்பாவிற்குரிய பொருளை நிரனிறையாகக் கொள்வர் இளம்பூரணர்.

ஏ, குரை ஆகிய சொற்கள் ஒவ்வொன்றுமே இசைநிறையாகவும் அசைநிலையாகவும் வருகின்ற தன்மையுடையன என்று பொருள் கொள்ள வேண்டுமென்பது சேனாவரையர் கருத்து. ஆயினும் குரை என்பது அசைநிலையாய் வரும் என்பதற்கு அவர் காட்டும் எடுத்துக் காட்டு மயங்குதற்குரியதாய் உள்ளது. 'பல் குரைத் துன்பங்கள் சென்றுபடும்' என்பது அசைநிலை என்பர் சேனாவரையர். இதனை இசைநிறை என்பர் பரிமேலழகர்.

''செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே''

என்ற நூற்பாவிற்கு இளம்பூரணரும் சேனாவரையரும் இருவேறுபட்ட நிலையில் உரைகாண்பர். ''செய்யாய் என்கின்ற முன்னிலை வினைச்சொல் செய்யென்னும் சொல்லும் ஆமிடன் உடைத்து'' என்று உரைகாண்பர் இளம்பூரணர். ஆனால் ''செய்யாய் என்னும் முன்னிலை எதிர்மறை எதிர்மறைபடாது செய்யென் விதிவினை ஆதலும் உரித்தென்றாரால் உரையாசிரியரெனின்'' என்று சேனாவரையர் கூறுவதன் மூலம் இளம்பூரணருரையில் ''செய்யாய் என்னும் முன்னிலை எதிர்மறை வினைச்சொல் என்றிருக்க வேண்டும்'' என்பர். எனவே செய்யாய் என்பதை எதிர்மறை வினைச்சொல் என்று இளம்பூரணரும் முன்னிலை வினைமுற்றுச்சொல் என்று சேனாவரையரும் கொள்கின்றனர் என்பது தெளிவு.

எதிர்மறைச் சொல்லுக்கு இலக்கணம் கூறவேண்டியிருப்பின் செய்யாய் என்னும் எதிர்மறைச் சொல்லென்றே தொல்காப்பியர் கூறியிருப்பர். அவ்வாறு கூறாததால் செய்யாய் என்பது முன்னிலை வினைமுற்றுச் சொல்லையே குறிக்கும் என்பர் சேனாவரையர். செய்யாய் என்பதை முன்னிலை வினைமுற்று என்று கருதித் தொல்காப்பியர் கூறியிருப்பாராயின், அதன் இலக்கணத்தை வினையியலுள் கூறியிருக்க வேண்டும். வினையியலுள் சொல்நிலை மாற்றம் பற்றிய இலக்கணம் கூறப்படுதலைக் காணலாம். செய்யும் என்னும் எச்சம் மகரமும் உகரமும் கெட்டுச் செய் என்று நிற்றலும் உரித்து என்பது வினையியலுள் கூறப்படுகின்றது. என சேனாவரையர் கூறுவதுபோல் ''செய்யாய் என்னும் வினைமுற்று செய் என்று நிற்கும்'' என்பதையும் வினையியலில் கூறியிருக்க வேண்டும். அவ்வாறு கூறாது அதனை எச்சவியலுள் கூறியதற்குக் காரணம் அந்நூற்பாப்பொருணிலை பற்றிக் கூற வந்ததேயாகும்.

... ...

இனி வேற்றுமையுருபுகளையும் அவற்றின் பொருளையும் உணர்த்தும் நூற்பாக்களை ஒன்றாக்கியுரைப்பர் இளம்பூரணர். ஏனைய உரையாசிரியர்கள் இரண்டாக்கியுரைப்பர். உருபுகளுக்குத் தனித்த நிலையில் பொருளில்லை என்பதாலும் அவை தொடர் நிலையில் பெயர்களோடு சேர்ந்து பொருள் உணர்த்தும் தன்மை பெறுகின்றன என்பதாலும், பொருளை உருபுகூறும் நூற்பாவோடு சேர்த்து அமைத்தார் இளம்பூரணர். அவ்வாறு அமைந்ததே ஏழாம் வேற்றுமை பற்றிய நூற்பாவாகும். இதற்குரிய நூற்பாவை இரண்டாக்கியுரைப்பர் சேனாவரையர் போன்றோர். இந்நூற்பாவுரையுள், ''அவ்வேற்றுமையுருபு பலவாகலின், அவற்றை விரிக்கின்றார் என்று இளம்பூரணர் கூறுவர். இதனை மறுக்கும் சேனாவரையர் ''கண்முதலாயினவெல்லாம் உருபென்றாரால் உரையசிரியரெனின்'' என்று கூறி அவ்வாறு கொள்ளுதல் பொருந்தாது என்றுரைப்பர். ஆனால் இளம்பூரணர் உருபையும் பொருளையும் வேறுபடுத்தாது உரைகண்டார் என்பதை, நூற்பாக்களைச் சேர்த்துக் கூறும் முறையாலும், உரைப்போக்காலும் உணரலாம். சேனாவரையரின் இம்மறுப்பு பொருந்துவதன்று என்பதைச் சேனாவரையரின் உரைகொண்டே நச்சினார்க்கினியர் உரைப்பர்.

இவ்வாறு இளம்பூரணர் நூற்பாவிற்குக் கூறிய உரையை எடுத்துச் சேனாவரையர் மறுக்குமிடங்கள் நிரம்பவும் காணப்படு கின்றன.

எடுத்துக்காட்டுகளைக் காட்டி மறுத்தல்

இளம்பூரணர் நூற்பாவிற்குக் கூறிய உரையைச் சுட்டி அதனை மறுத்துக் கூறிய சேனாவரையர், இளம்பூரணர் காட்டிய எடுத்துக்காட்டுகளைக் கூறி அவற்றின் வழித் தன் மறுப்பையும் கூறுவர். நூற்பாவின் பொருளுக்கேற்ப அவ்வெடுத்துக்காட்டுகள் அமையவில்லையென்பதை அம்மறுப்புகள் சுட்டுகின்றன. எனினும் அந்நூற்பா உரைகளில் இளம்பூரணரோடு சேனாவரையர் வேறு படவில்லை. அவ்வெடுத்துக்காட்டுகள் நூற்பாவிற்கேற்ப அமை யாத் தன்மையை ஐயம் தோற்றியுரைப்பர் சேனாவரையர். இத னால் அவ்விடங்களில் சேனாவரையரின் மறுப்புத் திறனும் அத் திறனால் வெளிப்படும் தருக்க அறிவும் புலனாகின்றன. எடுத்துக் காட்டுகளைக் காட்டி மறுத்துரைக்கும் இம் மறுப்பு முறை பெரி தும் போற்றத்தக்கதாக அமைகின்றது.

தகுதி வழக்கு என்று தொல்காப்பியர் கூறியனவற்றைத் தகுதி மூன்று வகைப்படும் என்றும், வழக்காறு மூன்று வகைப் படும் என்றும் இளம்பூரணர் கூறுவர். தகுதி மங்கல மரபினாற் கூறுதலும், இடக்கரடக்கிக் கூறுதலும், குழுவின் வழிவந்த குறி நிலை வழக்கும் என மூவகைப்படும்; இவற்றுள் மங்கல மரபினாற் கூறுதலுக்குச் 'செத்தாரை துஞ்சினார் என்றல்', 'சுடுகாட்டை நன்காடு என்றல்' என்பனவற்றையும், குழுவின் வழிவந்த குறி நிலை வழக்கிற்குப் 'பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றல்' 'வண்ணக்கர் காணத்தை நீலம் என்றல்' என்பனவற்றையும் எடுத்துக்காட்டுகளாகத் தருவர்.

குறிநிலை வழக்கையும், இடக்கரடக்கலையும் இந்நூற்பா வில் கொள்ள வேண்டிய நிலையில்லை என்பதைக் கூறுதற்காக, அவர் காட்டிய எடுத்துக்காட்டுகளைக் கூறி விளக்கம் தருவர். பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றாலும் வண்ணக்கர் காணத்தை நீலம் என்றலும் முதலாகிய குழுவின் வந்த குறிநிலை வழக்கும், கண்கழீஇ வருதும், கால்மேல் நீர்பெய்து வருதும் என்னும் தொடக்கத்து இடக்கரடக்கும், தகுதியென்றும் மரூஉ

முடிபை வழக்காறு என்றும் உரையாசிரியர் அமைத்தாரால் எனின் குழுவின் வழிவந்த குறிநிலை வழக்குச் சான்றோர் வழக்கின் கண்ணும் அவர் செய்யுட்கண்ணும் வாராமையான் அமைக்கப்படா வாகலானும், இடக்கரடக்கு அவையல் கிளவி எனவும், மறைக்குங் காலை எனவும் முன்னர் அமைக்கப்படுதலானும், அவர்க்கது கருத்தன்றென்பது'' என்பது அவ்வுரை. இதனால் குழுவின் வழிவந்த குறிநிலை வழக்கையும், இடக்கரடக்கலையும் இந்நூற் பாவால் கொள்ளவைப்பது பொருத்தமின்று என்பது சேனாவரையர் கருத்தாகும்.

பெயரினாலும் தொழிலினாலும் பிரிந்து இருதிணை ஆண் பெண்ணுள் ஒன்றனை ஒழித்துக் குறிப்பால் உணர்த்தும் என்பது தொல்காப்பியம். இவற்றுள் அஃறிணைக்கண் தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகு சொல்லிற்கும், பெண்ணொழி மிகு சொல்லிற்கும் இளம்பூரணர் எடுத்துக்காட்டுத் தருவர். 'இன்று இவ்வூர்ப் பெற்ற மெல்லாம் அறங்கறக்கும் என வரும்; இஃது அத்திணைக்கண் தொழிலிற் பிரிந்த ஆணொழிமிகு சொல்'' என்று இரண்டிற்கும் எடுத்துக்காட்டுத் தருவர்.

இளம்பூரணர் காட்டிய இவ்வெடுத்துக்காட்டுகள் அஃறி ணைக்கண் தொழிலிற் பிரிந்து பால் உணர்த்துவன ஆகாதென்பர். பெற்றம் என்பது பொதுப்பெயர், கறத்தலும் உழுதலுமாகிய சிறப்பு வினையால் அவற்றைப் பாலுணர இயலுகின்றது. கறத் தல் என்ற வினை அஃறிணைப் பெண்பாலுக்கும், உழுதல் என்ற வினை அஃறிணை ஆண்பாலுக்கும் உரியன என்பது சிறப்பு வினை யால் பொதுமை நீக்கிப் பிரித்தறியப்படுகின்றன என்பதால் இவை வழுவாகமாட்டா. எனவே இவ்வெடுத்துக்காட்டுகள் இங்குக் காட்டத் தேவையில்லை என்ற கருத்தைச் சேனாவரையர் உணர்த் துவர்.

ஆனால் அஃறிணைக்கண் தொழிலிற் பிரிந்தனவற்றிற்கு நச்சினார்க்கினியர் காட்டும் எடுத்துக்காட்டு நயமுடையதாகும். ''யானை ஓடிற்று என்பது தொழிலிற் பிரிந்த பெண்ணொழி மிகு சொல். யானை நடந்தது ! இது தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகுசொல். இவை அஃறிணைக்கண் பெயரானும் தொழிலானும் பிரிந்தன'' என்பர் நச்சினார்க்கினியர். இவற்றுள் ஓடுதல் ஆண்யானையின் இயல்பாதலால் பெண்ணையொழித்தும் நடத்தல் பெண்யானையின் இயல்பாதலால் ஆணையொழித்தும் தொழிலிற் பிரிந்தனவாயின.

'எடுத்தமொழி இனஞ்செப்பலுமுரித்தே' என்ற நூற்பா விற்கு இளம்பூரணர் கூறிய எடுத்துக்காட்டை மறுத்துரைப்பர் சேனாவரையர். ''மேலைச்சேரிக்கோழி அலைத்தது எனக் கீழைச் சேரிக் கோழி அலைப்புண்டமை சொல்லாமையே முடிந்ததாம். குடங்கொண்டான் வீழ்ந்தான் என்ற வழிக் குடம் வீழ்ந்தமை சொல்லாமையே முடிந்ததாம். 'இந்நிகரன இனஞ்செப்பின' என்று இனஞ்செப்புதற்கும் ''ஆ வாழ்க அந்தணர் வாழ்க'' என்று இனஞ்செப்பாததற்கும் எடுத்துக்காட்டுத் தருவர் இளம்பூரணர்''. இவற்றுள் இனஞ்செப்புதற்குக் காட்டிய எடுத்துக்காட்டுகள், இனஞ்செப்புவன அல்ல என்றும், இனஞ்செப்பாததற்குக் காட்டிய எடுத்துக்காட்டுகள், சொல்லுவான் குறிப்பினால் இனஞ்செப்பவுங் கூடும் என்றும் கூறுவர் சேனாவரையர்".

இங்குச் சேனாவரையர் கூறும் விளக்கங்கள் அவரது தருக்க நூல் அறிவைக் காட்டுகின்றன. புகையுண்டென்றவழி நெருப் புண்மை அறியவியலும் என்பது தருக்க உண்மை. ஒன்றன் காரணமின்றிக் காரியம் நிகழாது என்பதும் அதுவே. இவ்வடிப் படையில் கீழ்ச் சேரிக்கோழி அலைப்புண்டலன்றி மேலைச்சேரிக் கோழி அலைத்தல் அமையாமையானும், குடம் வீழ்தலன்றிக் குடங்கொண்டான் வீழ்தல் அமையாமையானும்" என்று அவ் வெடுத்துக்காட்டுகள் இனஞ்செப்பவில்லை என்ற கருத்தை வெளிப்படுத்துவர். எனினும் சேனாவரையர் கூறும் இம்மறுப்பு பொருந்தாது என்பர்.

வினைமுதலுரைக்குங் கிளவி என்பதற்குத் தொல் காப்பியம், கபிலம் என்பனவற்றை எடுத்துக் காட்டாகத் தருவர் இளம்பூர ணர். தொல்காப்பியம், கபிலம் போன்றவை வினைமுதலுரைக் குங் கிளவி என்பதை மறுத்துரைப்பர் சேனாவரையர். தொல்காப் பியன், கபிலன் என்னும் பொருளிறுதி இவனாற் செய்யப்பட்டது என்னும் பொருள் தோன்ற அம்மென்பதோரிடைச் சொல் வந்து அன்கெடத் தொல்காப்பியம், கபிலம் என நின்றன'' என்று அவற் றிற்கு விளக்கம் கூறுவர் சேனாவரையர். வினைமுதலுரைக்குங் கிளவி என்பதற்கு அவர்தரும் எடுத்துக்காட்டு 'இவ்வாடை கோலிகள்' என்பதாகும்.

தெய்வச்சிலையார் வினைமுதல் என்பதை உம்மைத்தொகை யாகக் கொண்டு வினையால் உரைக்கும் கிளவியென்றும், வினை

முதலான் உரைக்குங் கிளவியென்றும் பொருள் கொண்டு விளக்கம் தருவர் வினையால் உரைக்கும் கிளவிக்கு எழுத்து, சொல் என்ப தையும் வினை முதலால் உரைக்கும் கிளவிக்குச் சாலியனால் செய்யப்பட்ட ஆடையைச் சாலியன் என்பதையும் எடுத்துரைப் பர்.

வினைமுதலுரைக்குங் கிளவி என்பதற்கு, வினைசெய்தான் பெயர்சொல்ல அவன் செய்பொருளை யறிய நிற்றல் என்று பொருள் காண்பர் இளம்பூரணர். ஆனால் அவர்காட்டும் எடுத்துக் காட்டு அவர்கூறும் உரை விளக்கத்திற்குப் பொருந்துமாறில்லை என்பது நன்கு விளங்கும். வினை முதலுரைக்குங் கிளவி யென் பதற்கு வினைமுதலைச் சொல்ல வினைசெய்தான் பெயர் அறிய நிற்றல் என்று பொருள் கொண்டால் தொல்காப்பியம், கபிலம் என்பன வினைமுதலுரைக்குங் கிளவி என்று கொள்ளுதல் ஏற் புடைத்தாகும். தெய்வச்சிலையார் இவற்றைக் காரணப்பெயர் என்று கூறினாலும் அக்காரணப் பெயர்களும், பின் காரணவாகு பெயராகப் பெயர் பெறுதலால் அவற்றை ஆகுபெயராகக் கொள் ளுதல் பொருந்தும்.

இவ்வாறு எடுத்துக்காட்டுகளைக் காட்டித் தமது மறுப் பினைக் கூறுவதன் மூலம் சேனாவரையரின் மறுப்புத் திறம் நன்கு வெளிப்படுகின்றது.

இலக்கணக் கருத்துகளைக் கூறி மறுத்தல்

இளம்பூரணர், சில சொற்களுக்கு இலக்கண விளக்கம் கூறுகின்ற முறையையும், இலக்கணக் குறியீட்டுச் சொற்களுக்கு விளக்கம் கூறுகின்ற தன்மையையும் சேனாவரையர் மறுத் துரைப்பர்.

'என்மனார்' என்ற சொல் முடிபிற்கு இளம்பூரணர் கூறுகின்ற விளக்கத்தைச் சேனாவரையர் காரணங்காட்டி மறுத்துக்கூறுவர். 'என்ப என்னும் முற்றுச் சொல்லினது பகரங் குறைத்து மன்னும் ஆரும் என இரண்டு இடைச்சொல் பெய்து விரித்தார் என்று உரையாசிரியர் கூறினாரால் எனின்; என்மனார் என்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது, இந்நூலுள்ளுஞ் சான்றோர் செய்யுள்ளும் பயின்று வருதலானும், இசைநிறை

என்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார், பின்னும் இசைநிறை என்றல் மேற்கோள் மலைவாதலானும், அவர்க்கது கருத்தன் றென்க என்பர் சேனாவரையர்.

என்மனார் என்ற சொல் முடிபிற்கு இளம்பூரணர் கூறிய விளக்கம் இறையனாரகப் பொருள் உரையில் இருந்து பெறப் பட்டதாகும். இளம்பூரணர் கருத்துப்படி 'என்மனார்' என்பது விகாரச் சொல்லாகும். ஆனால் சேனாவரையர் இதனை ஆர் ஈற்று எதிர்கால முற்றுச்சொல் என்பர். இளம்பூரணரின் அக்கருத் தை இருவகையில் மறுக்கிறார் சேனாவரையர். ஒருசொல் இலக்கிய இலக்கணங்களில் பெரிதும் பயின்று வருமானால் அது இயற்கைச் சொல்லாகவே இருக்கவேண்டும். எம்மனார் என்ற சொல்லில் உள்ள மன் என்பது இசைநிறையாக வராது. இக் காரணங்களால் இளம்பூரணர் அச்சொல்லிற்குக் கொண்ட விளக்கம் பொருந்தாது என்பர் சேனாவரையர்.

இது போன்று பலவிடங்களில் இலக்கணக் கருத்துகளைக் கூறி மறுக்கும் திறனைக் காணவியலும்.

சொல்லதிகாரத்திற்கு எழுந்த சேனாவரையர் உரையால் இளம்பூரணரின் உரைஎளிமை நன்கு வெளிப்படுகின்றது. தருக்கமுறை உரைநெறியைப் பின்பற்றிய சேனாவரையர் தம் புலமை நலம் தோன்றும் அளவில் தம் உரையை அமைத்துள்ளார். இதனால் இன்றுள்ள இளம்பூரணர் உரையில் திருத்தம்பெற வேண்டிய பல பகுதிகள் புலனாகின்றன. இவ்வுரை ஒப்பீடுகளை நன்கு ஆய்ந்து அத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது அறிஞர் கடமை.

மொழிபெயர்ப்பில் சொற்பொருள் சிக்கல்கள்

செ. இராசேசுவரி

மொழிபெயர்ப்புப் பணியில் சொல்லை அடிப்படை அலகாக நைடா என்னும் திறனாய்வாளர் கருதுவார். காட்போர்டு என்பார் 'வாக்கியங்களை' அடிப்படை அலகாகக் கொள்வார். ஒரு சொல்லுக்குப் பொருள் கொள்வதில் மொழிபெயர்ப்பாசிரியர் சொற்பொருளைக் காட்டிலும் சூழற்பொருளுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்பது நைடாவின் கருத்து. ஒரு சொல் சொற்பொருளை உணர்த்துவதோடு குறிப்புப் பொருளையும் உணர்த்துமானால் அந்நிலையில் அதற்குரிய காரணங்களாக அல்லது பின்னணிகளாக இருப்பவை எவை என்பதனையும் இவ் அறிஞர் விளக்கியுள்ளார். இவ் அடிப்படையில் சொற்பொருள் காண்பதில் ஏற்படும் சிக்கல்களை ஆராய்வது பயன்தரு முயற்சியாகும். பொருள் கொள்வதில் ஏற்படும் வேறுபாடுகளைச் சங்க இலக்கியமான முல்லைப்பாட்டு மொழிபெயர்ப்புகளைக் கொண்டு ஆராயலாம்.

1. முல்லைப்பாட்டு மொழிபெயர்ப்புகள் :

முல்லைப்பாட்டுக்கு வெவ்வேறு காலகட்டங்களில் செய்யுள் வடிவ மொழிபெயர்ப்புகள் தோன்றியுள்ளன. ஜே.வி. செல்லையாவும் (1946) என். இரகுநாதனும் (1978) பத்துப்பாட்டு இலக்கியங்களை மொழி பெயர்த்துள்ளனர். உரைநடையாக சோமசுந்தரம் பிள்ளையும் (1959), தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரும் மொழி பெயர்த்துள்ளனர். அண்மையில் 1980-இல் ஏ வி. சுப்பிரமணியம் புதுக்கவிதை முறையில் (Blank Verse) மொழிக்கட்டாக (Trans Composition) செய்துள்ளார். இவற்றுள் முதலிரண்டு மொழி பெயர்ப்புகள் மட்டும் ஈண்டு ஆய்வுப்பொருளாக அமைகின்றன.

2. முதல் மொழிபெயர்ப்பு :

ஜே வி. செல்லையா தாம் முல்லைப்பாட்டை மொழிபெயர்த்ததற்குக் காரணமாகிய இரண்டு நோக்கங்களை நூலின் முன்னுரையில் தெரிவித்துள்ளார்.

1. நம்முடைய வளமையான பாரம்பரியத்தைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டிய கடப்பாடு

2. படித்த தமிழர்கள் பலரும் சங்க இலக்கியம் பற்றி அறியாதிருத்தலால் அவர்கட்கு இவ் இலக்கியத்தை அறிவித்தல்.

இதனால் இவர் மூலநூலின் ஒவ்வொரு சொல்லையும் மொழி பெயர்த்திருக்கிறார். தம்முடைய சொற்கள் கூடுதலாகச் சேர்ந்து விடல் கூடாது என்பதில் இவர் கவனமாக இருந்திருக்கிறார்.

3. இரண்டாம் மொழிபெயர்ப்பு :

என் இரகுநாதன் நூலின் முன்னுரையில் தாம் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பாகத் தரவில்லை என்பதனைத் தெரிவிக்கிறார்.

> ''இருபதாண்டுகளுக்கு முந்தைய; சங்க இலக்கிய மொழி பெயர்ப்புகளைப் படித்த பின்னர் உண்மையான மரபாக்க மொழிபெயர்ப்பைத் (Faithful and Idiomatic Translation) தரவேண்டும் என்ற நோக்கத்தில் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டது''.

இதனால் தாம் தற்சார்பின்மையையும் துல்லியத்தன்மையையும் போற்றியிருப்பதாகவும் இவர் தெளிவாக் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றால் இரண்டு மொழிபெயர்ப்புகளிலும் 'சொல்' வெவ்வேறு நிலையைப் பெற்றுள்ளது தெளிவாகும். இப்பின்னணியில் மொழிபெயர்ப்பில் ஆசிரியர்கள் எதிர்கொண்டுள்ள சொல்லின் சிக்கல்கள் ஆய்விற்குரியன.

4, சொற்களும் அவற்றின் வகைகளும் :

சொற்களை அறிவுச்சொற்கள், உணர்ச்சிச் சொற்கள் என இரண்டாகப் பிரிப்பர். இவற்றுள் அறிவுச் சொற்களை மொழி பெயர்ப்பது மற்றவற்றைக் காட்டிலும் எளிது என்று நம்புகின்றனர். ஆனால் ஓர் அறிவுச் சொல்லுக்கு மொழிபெயர்ப்பில் இரு வேறு சொற்கள் காணப்படும்போது அவ்வேறுபாட்டிற்குரிய காரணங்களை ஆராய்வது சிக்கலின் தன்மையைப் புலப்படுத்த உதவும்.

5. சொல்லும் பெயர்ப்பும் :

முல்லைப்பாட்டின் உரிப்பொருள் இருத்தலும், இருத்தல் நிமித்தமும் ஆகும். பருவம் கண்டு இரங்கிய தலைமகளிடம் தலைவனின் வருகையைப் பற்றிக் கூறுவதும், அவள் ஆற்றி யிருப்பதும் பாடற் கருத்தாகும். தலைவியிடம் விரிச்சி கேட்டு வந்த பெருமுது பெண்டிர்,

"வருதல் தலைவர் வாய்வது நீநின்
பருவரல் எவ்வம் களை மாயோய்" (வரிகள் : 19-20)

என்று கூறி ஆற்றுவித்தனர். 'தலைவர்' என்ற சொல்லை ஜே.வி. செல்லையா 'spouse' என்றும், என். ரகுநாதன் 'Lord' என்றும் மொழிபெயர்த்துள்ளனர்.

இவ்வரிகளில் அகத்திணை மாந்தர் என்ற முறையில் பாட்டுடைத் தலைவன் காதல் தலைவன் என்ற தலைமைச் சிறப்பைப் பெறுகிறான். 'தெவ்வர் முனை கவர்ந்துகொண்ட திறையர்'வினை முடித்து வருதல் என்பது புறம் சார்ந்தது. புறத்திணையில் இத் தலைவன் ஊர்த்தலைவனாக அல்லது படைத்தலைவனாகக் கொள்ளப்படுவான்.

முதல் மொழிபெயர்ப்பில் தலைவர் என்பதற்குக் காணப் பெறும் 'spouse' என்னும் மொழிப்பெயர்ப்பு பாகத்தார் (Partner) காதலர் (Consort) துணைவர் (Mate) என்ற பொருட்களை உடையது. இம்மொழிபெயர்ப்பு வாழ்க்கைத் துணைவனை அல்லது காதல் தலைவனை உணர்த்துகிறது. இங்கு இச்சொல்லை மொழி பெயர்ப்பாசிரியர் பாடற்சூழலைக் கருத்திற் கொண்டு மொழி பெயர்த்துள்ளார். ஆனால்,இரண்டாம் மொழிபெயர்ப்பில் ஆசிரியர் அவ்வாறின்றி, தலைவனை 'Lord' என மொழிபெயர்த்துள்ளார். தலைவியின் தலைவன் என்பதனைக் காட்டிலும், பெருமுது பெண்டிரின் நோக்கில் அவனை ஊர்த்தலைவனாகக் கொண்டதனால் இங்கு 'Lord' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

6, சொல்வோரும் கேட்போரும்

முதல் மொழிபெயர்ப்பில் காதல் தலைவனாகவும், இரண்டாம் மொழிபெயர்ப்பில் ஊர்த்தலைவனாகவும் ஒரே சொல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இச்சிக்கல் ஏற்பட்டதன் காரணத்தைப் பின்

வருமாறு விளக்கலாம். ஒரு சொல் சொற்பொருள் மட்டுமின்றிக் குறிப்புப்பொருளும் தருவதாக இருந்தால், அச்சூழலில் மூன்று கூறுகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன என்பது நைடாவின் கருத்து. அவை வருமாறு :

1. கூற்றுமாந்தர் தொடர்பு (Association with the speakers)
2. வழக்குச் சூழல் (Circumstances of Usage)
3. மொழியியல் அமைப்பு (Linguistic Setting)

இம்மூன்றின்வழி ஆராய்ந்தால் 'Lord' என்ற மொழிபெயர்ப்பின் காரணங்களை அறிய முடியும். முல்லைப்பாட்டில் 'தலைவர்' என்னும் சொல் 'வருதல் தலைவர் வாய்வது' என்று விரிச்சி கேட்ட பெருமுது பெண்டிர் கூற்றில் இடம்பெற்றுள்ளது. இப் பெண்டிர் தலைவியிடம் தலைவன் வருகை குறித்துச் சொல்லும் போது,

''தெவ்வர் முனை கவர்ந்து கொண்ட திறையர்
வருதல் தலைவர் வாய்வது வினை முடித்து''

என்றதனால் போரில் வெற்றி பெற்றுத் திரும்பும் அரசனைத் 'தலைவர்' எனக் குறித்ததாக மொழிபெயர்ப்பாளர் கருதியிருக்கலாம். இதனால் 'Lord' என்னும் சொல்லை அவர் பயன்படுத்தியிருக்கிறார் என்று கூறலாம். பெருமுதுபெண்டிர் நோக்கின் ஊர்த்தலைவனாகக் கொண்டதும், இவ்வாறு கூறும்போது, கூற்று மாந்தர் தொடர்பாக — வழக்குச் சூழலாக — போர் முடித்துத் திரும்பும் செய்தியை அவர்கள் கூறுவதும், மொழியியல் அமைப் பின்படி உயர்திணை ஒருமையில் 'அர்' என்னும் சிறப்பு விகுதியால் வழங்குவதும் பொருத்தமுற அமைகின்றன. எனவே இரண்டாம் மொழிபெயர்ப்பு 'தலைவர்' எனும் சொல்லை அகத்திணை மாந்தராகக் கொள்ளாமல் புறத்திணை மாந்தராக, போர்த்தலைவனாகக் கொண்டுள்ளது.

'spouse' என்னும் முதல் மொழிபெயர்ப்பு தலைவியின் நோக்கிலும் 'Lord' என்னும் இரண்டாம் மொழிபெயர்ப்பு கூற்று மாந்தரான விரிச்சி கேட்ட பெண்டிர் நோக்கிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

7, சொற்பொருள் ! சூழற்பொருள் !!

மொழிபெயர்ப்பில் சொற்பொருளைக் காட்டிலும் சூழற் பொருளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்ற கருத்து முன்னர்க் கூறப்பட்டது. சொற்பொருள் அடிப்டையில் தலைவர் என்பதனைத் தலைமைப்பொறுப்பேற்றவர் எனக் கொண்டு 'Lord' என்று இரண்டாம் மொழிபெயர்ப்பில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், முதல் மொழிபெயர்ப்பு 'தலைவர்' என்பதனை, இலக்கியத்தின் தலைமை மாந்தருள் ஒருவராகக் கொண்டு, ஆற்றியிருக்கும் தலைவியின் தலைவனாக 'Spouse' என்று மொழி பெயர்த்திருப்பது சூழற்பொருளுக்கு முன்னுரிமை கொடுத்திருப் பதனைப் புலப்படுத்துகிறது.

'Lord' என்பது 'spouse' என்ற பொருளையும் தரக்கூடிய தென்றாலும் 'spouse' என்னும் சொல் புலப்படுத்தும் காதல் தலைவன் என்ற தெளிவான பொருளை 'Lord' என்பது புலப் படுத்தவில்லை. இரண்டு சொற்களையும் ஒரே பொருட்களத்தைச் சேர்ந்தனவாகக் (Semantic Field) கருதினாலும், 'Spouse' என்னும் மொழிபெயர்ப்பு - 'தலைவர்' என்பதற்குரிய நெருங்கிய இணை யாக (the closest equivalent) இருப்பது தெளிவு. காதல் பிரிவால் வருந்தும் தலைவிக்குக் கன்றை நாடி வீடு திரும்பும் மேய்ச்சல் பசுக்களையும் பெருமுது பெண்டிர் காட்டுகின்றனர். இச்சூழலில் 'தலைவர்' என்ற சொல்லைக் காதல் தலைவனாகக் கொண்டு 'spouse' என மொழிபெயர்ப்பது சூழற்பொருளுக்கு முன்னுரிமை வழங்கிய மொழிபெயர்ப்பாகத் திகழ்கிறது நூலின் பாடுபொருள் காதலாக இருப்பதால் பாட்டுடைத் தலைவனும் காதல் தலை வனாக இருப்பதே மரபு.

முடிவுரை :

சொற்களின் புலப்பாட்டுத் திறன் சொல்லும் மாந்தரோடும் சொல்லப்படும் சூழலோடும் கலந்து இருப்பதனால் மொழிபெயர்ப் பாசிரியர்கள் இலக்கிய மொழிபெயர்ப்பில் அகராதிப் பொருளை அளிப்பது தவறான போக்காகும். எனவே, மொழிபெயர்க்க வேண்டியது சொற்பொருளையா? சூழற் பொருளையா? என்றும், கருத்தில் கொள்ளவேண்டியது சொல்வோர் யார் என்பதையா? கேட்போர் யார் என்பதையா? என்றும் தெளிவாக உணர்தல் வேண்டும். இவ்விரு முறைகளையும் பின்பற்றுவதால் மொழி பெயர்ப்புப் பணியில் சொற்பொருள் காண்பதில் ஏற்படும் சிக்கல் களைத் தீர்க்க முடியும்.

வரலாற்றியல் திறனாய்வு

டாக்டர். ம. மதியழகன்

இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு, இலக்கியக் கொள்கை மூன்றும் ஒன்றையொன்று மிகத்தழுவி அமைந்துள்ளன. இம்மூன்றில் ஒன்றினை மற்ற இரண்டின் துணையின்றி அறிய முடியாது. இலக்கியத் திறனாய்வின் ஒரு பகுதியான வரலாற்றியல் திறனாய்வுக்கு இலக்கிய வரலாறும் இலக்கியக் கொள்கையும் தெளிவாகத் தெரிந்திருத்தல் வேண்டும். இவ்வரலாற்றியல் திறனாய்வு இலக்கியவழி வரலாற்றோடும் ஓரளவுக்கு இணைந்து வருகின்றது எனலாம். இலக்கிய வரலாறே வரலாற்றியல் திறனாய்வுக்கு அடித்தளமிட்டது எனக் கூறுதலும் பொருந்தும். இலக்கிய வரலாறு பற்றிய சிந்தனையே வரலாற்றியல் திறனாய்வின் அடிப்படை எனலாம். இந்த இலக்கியம் இந்தக் காலத்தைச் சேர்ந்தது என்ற வரையறைக் கணிப்பே வரலாற்றியல் திறனாய்வின் முதற்படி.

வரலாற்றியல் திறனாய்விலிருந்தே சமூகவியல் திறனாய்வு (Sociological Criticism) வளர்ச்சி பெற்றது எனலாம். இவ்வரலாற்றியல் திறனாய்வு, வாழ்க்கை வரலாற்றியல் திறனாய்வோடும் (Biographical Criticism) இயைபு கொண்டது. திறனாய்வு முறைகள் பலவிருப்பினும் ஒன்றன் கூறு மற்றொன்றில் கலந்திருப்பதும், ஒன்றையொன்று அவாவி நிற்பதும் தவிர்க்க முடியாதது. தெளிவு கருதியும், மிகுதி கருதியும் இவை தனித்தனிப் பார்வைகளாகக் கொள்ளப்பட்டு ஆராயப்பட்டுவருகின்றன. சமூகவியல் பார்வையில் உளவியலும், உளவியலில் வாழ்க்கை வரலாற்றியலும், சில கூறுகளாகக் கலந்து விரவியே நிற்கும். இவற்றையெல்லாம் உட்கொண்டே ஒரு திறனாய்வாளன் இலக்கியத்தை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

வரலாற்றியல் திறனாய்வு என்பதை இருநிலைகளில் காணலாம்.

1. ஓர் இலக்கியப் படைப்பின் காலத்தைக் கொண்டு, அக்காலச் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளில் அவ் விலக்கியத்தின் பாடுபொருள், உத்தி. நடை போன்றவற்றை நோக்குதல்.

2. ஓர் இலக்கிய வகையின் தோற்றம், வளர்ச்சி போன்ற வற்றைக் கால அடிப்படையில் நோக்குதல் அல்லது ஒரு படைப் பினைத் தொடக்க முதல் இறுதிவரை கால அடிப்படையில் நோக்குதல்.

முதல் நிலையில் சமூகவியல் திறனாய்வோடு வரலாற்றியல் பார்வையில் ஓர் இலக்கியத் தோற்றத்திற்கான சமூக காரணி களும், இலக்கியங் காட்டுகின்ற சமூக நிலைகளும் நோக்கப் படுகின்றன. வரலாற்றியல் பார்வையில் அக்காலச் சமுதாயக் காரணிகள் இலக்கியத்தில் இடம்பெற்ற தன்மைகள் நோக்கப் படுகின்றன.

இரண்டாம் நிலையில் காப்பியம் அல்லது புதினம் (Novel) தோற்றம் பெற்றதும் பல்வேறு காலச்சூழலுக்கேற்ப அக்காப்பிய அல்லது புதின இலக்கிய வகையில் ஏற்பட்ட மாற்றங்களைக் காணுதலும் அடிப்படையானது. மற்றொரு பகுதியில் பாரதியின் தொடக்ககாலப் படைப்பிலிருந்து இறுதிக்காலப் படைப்புவரை கால மாற்றத்தால் நிகழ்ந்த மாற்றங்களைப் பார்ப்பது. ஒரு புதின ஆசிரியனின் முதல் புதினத்திலிருந்து இன்றைக்கு அவன் படைக் கும் புதினங்கள் வரை ஏற்பட்ட மாற்றங்களைக் கால அடிப் படையில் பார்ப்பது என்பதும் அடங்கும்.

இக்கட்டுரையில், இரண்டாம் நிலையான ஓர் இலக்கிய வகையின் தோற்றம், வளர்ச்சி போன்றவற்றைக் கால அடிப்படை யில் நோக்குதல் என்ற வகையில் தமிழ்ப் புதினங்களை வரலாற்றியல் திறனாய்வில் நோக்குதல் மேற்கொள்ளப் பெறு கின்றது. இதற்கு, முன்னர்க் குறிப்பிட்டது போல் புதின இலக் கியக் கொள்கையும், புதின வரலாறும் தெளிவாக உணர்ந்திருத் தல் வேண்டும். அத்தெளிவு இல்லையென்றால் இப்பார்வையில் குறைபாடு ஏற்படலாம்.

புதின வளர்ச்சிக் காலகட்டத்தை (1) 1876—1900 என்றும் (2) 1900—1930 என்றும் (3) 1930க்குப் பிறகு என்றும் பகுத்துள்ளனர். இவற்றில், முதற்காலகட்டம் மூன்று நிலைகளில் நோக்கப்பட வேண்டியுள்ளது. அவையாவன (1) அக்கால அரசியல் நிலை (2) தமிழ் இலக்கிய நிலை (3) படைப்பாளர்களின் வாழ்க்கை நிலை. இம்மூன்று நிலைகளையும் தெளிவாக உணர்ந்தால்தான் இம்முதற் காலகட்ட புதினங்களில் (பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம், தீனதயாலு) பாடு பொருள், மொழிநடை கதை மாந்தர் படைப்பு, உத்தி போன்றவைகளின் பின்னணியை உணரமுடியும்.

அரசியல் நிலை : ஆங்கிலேயரின் ஆதிக்கம் பல நிலைகளில் படரத் தொடங்கிய காலகட்டமது. இந்திய தேசிய காங்கிரசு (1885) என்ற அமைப்பு தோன்றாத காலகட்டத்திலேயே தமிழில் முதல் புதினம் எழுந்துவிட்டது. இவ்வமைப்பு தோன்றிய பின்னரும் அயலவர் ஆதிக்கத்தை எதிர்க்கவேண்டும் என்றோ, விடுதலை பெற வேண்டுமென்றோ எண்ணாத காலகட்டமாக விளங்கியது ஆங்கிலேயஅரசிடம் தன்வேண்டுகோளை முன்வைத்தும், ஒன்றிரண்டை அவர்கள் ஏற்றுக்கொண்டபோது பாராட்டுப் பத்திரம் வாசித்தும் செயல்பட்டு வந்தது இந்திய தேசிய காங்கிரசு. வெளிப்படையான அரசியல் நிலைகளிலேயே இத்தகு போக்கு நிலவும் போது இலக்கியப் படைப்பாளர்களிடம் அயலவர் ஆதிக்கம் போன்ற எதிர்ப்புக் கருத்துக்களை நாம் எதிர்பார்க்க முடியாது. ஆதலால் முதல் காலகட்டப் புதினங்களில் அரசியலுக்கு அப்பாற்பட்ட செய்திகளே இடம் பெறலாயின என்பதும் இதன் வீச்சு முதற்காலகட்டத்தில் மட்டுமல்லாமல் இரண்டாம் காலகட்டத்திலும் நிலவியது என்பதும் இங்கு உணரத்தகும்.

மேலும், விடுதலை என்கிற எண்ணம் இரண்டு நிலைகளில் செயற்பட்டது என்பதை இந்திய விடுதலை இயக்க வரலாற்றை அறிந்தவர்கள் உணர்ந்திருப்பர். அரசியல் விடுதலை, சமூக விடுதலை என்ற இரு நிலைகளில் இது பிரிந்து நின்றது. அரசியல் விடுதலை முழக்கத்தை முன்வைத்தால் ஆபத்து என்கிற நிலையை உணர்ந்த படைப்பாளர்கள் தங்கள் செயற்பாட்டிற்குக் குந்தகம் ஏற்படாத வகையில் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்து இலக்கியங்களைப் படைக்க முற்பட்டனர். காந்தியத்

தாக்கம்பெற்ற புதினங்களில்கூட காந்தியின் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களான மதுவொழிப்பு, தீண்டாமை, பெண்ணடிமை எதிர்ப்பு போன்றவைகளே பெரிதும் இடம்பெற்றன என்பதும், உப்புச்சத்தியாக்கிரகம். வெள்ளையனே வெளியேறு இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் போன்றவை மிகுதியாக இடம் பெற வில்லை என்பதும் மேற்கூறிய கருத்துக்கு அரண் செய்கின்றன.

இலக்கிய நிலை : கிறித்தவ பாதிரிமார்களால் உரைநடை இலக்கியம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஓரளவிற்குப் பழக்கமான நிலையில் 'புதினம்' என்கிற படைப்பிலக்கியம் முன்வைக்கப்பட்டது. இப் புதிய இலக்கியவகையை எங்ஙனம் ஏற்றுக் கொள்வது என்கிற மனப்போக்கு நிலவியதை முதல் புதின ஆசிரியர்களின் முன்னுரைகள் மூலம் அறிந்துகொள்ளலாம். இலக்கியம் என்றாலே கவிதை என்பதையே மரபாகக் கொண்டிருந்த தமிழ் மக்களிடையே புதினம் என்ற உரைநடை இலக்கியத்தை உட்கொள்ளவே பல ஆண்டுகள் ஆகியது எனலாம். காவியவடிவங்களையே கேள்விப்பட்ட அல்லது உணர்ந்த மக்கள் ஒருபுறம்; செவ்வியல் இலக்கியங்களைத் தவிர பிற இலக்கியங்களை ஏறெடுத்தும் பார்க்காத தமிழறிஞர்கள் மற்றொருபுறம்; ஆங்கிலக் கல்வியின் பயனாக மேனாட்டு இலக்கியங்களைத் தெரிந்து, அவற்றைத் தமிழில் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற புதுமை வேட்கை கொண்ட ஆங்கிலம் படித்த தமிழர்கள் வேறொருபுறம்—இத்தகு நிலையில்தான் புதின இலக்கியம் தமிழில் கால்கொள்ளத் தொடங்குகிறது.

இத்தகு இலக்கியச்சூழல் நிலவிய காலகட்டத்தில் முதல் தமிழ் புதின ஆசிரியர்கள் அக்கால மக்களின் இலக்கியச் சுவைக் கேற்ற சில உத்திகளைக் கையாளத் தொடங்கினர். அதனால் கி.பி. 1875-இல் தூ.வி. சேசயங்கார் என்பவர் 'ஆதியூர் அவதானி சரிதம்' என்ற செய்யுள் வடிவில் அமைந்த புதினத்தைப் படைத்தார். எனினும், புதினத்திற்கும் உரைநடைக்குமுள்ள பிணைப்பு இப்புதினத்தை வெற்றிபெறச் செய்யவில்லை. தமிழர்களுக்கு அறிமுகமாகாத ஒன்றாகவே இன்றுவரை உள்ளது. 'நாவல்' என்ற பெயரை ஏற்றுக் கொள்வதில் கூட பெரும் போராட்டம் நிகழ்ந்திருக்கிறது அதனால்தான் 'வசன காவியம்' என்றும் 'சரித்திரம்' என்றும் 'புதினம்' என்றும் 'தமிழ் நவீனகம்' என்றும் 'திவ்விய சரித்திரம்' என்றும் 'கதாரத்தினம்' என்றும் இது போன்ற பல பெயர்களும் இவ்விலக்கிய வகைக்கு இடம் பெற்றன.

அடுத்து, மொழிநடையை எங்ஙனம் கையாள்வது? என்கிற கேள்வியும் எழுப்பப்பட்டது. இலக்கிய மொழியைக் கையாள்வதா? பேச்சு மொழியைக் கையாள்வதா? என்ற கருத்துக்கள் எழுந்தன. பத்மாவதி சரித்திர ஆசிரியர் அ. மாதவையா தனது புதினத்தின் முன்னுரையில்,

> ''கிரந்தத்தின் இடையிடையே கீழ்த்தரப் பாத்திரங்கள் பேச நேரும்பொழுது, இலக்கண வழுச் செறிந்த அவர் வாய் மொழிகளை அவ்வண்ணமே எழுதுவது வழக்கமாயினும் கிரந்தகர்த்தா நேரிற் கூறும் வரலாறுகள் வழுவின்றி யிருத்தல் வேண்டும். கல்வித் தேர்ச்சியில்லாரும் பயன் பெறும்படி எழுதப்படும் கிரந்தமாதலின் எவ்வளவு இலேசான நடையில் எழுதப்படினும் நலமே''

என்று குறிப்பிடுகிறார். இதுபோன்ற கருத்துக்கள் அக்கால புதின ஆசிரியர்கள் மொழிநடை பற்றி எந்த அளவு சிந்தித்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றன.

ஆசிரியரின் பின்னணி : புதினம் என்கிற புதிய இலக்கிய வகையை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் ஒருசிலருக்கு ஏன் ஏற்பட்டது? அவர்களுடைய வாழ்க்கைப் பின்னணி என்ன? என்பதும் அக்காலக்கட்டப் புதினங்களின் வளர்ச்சிப் போக்கை வரையறை செய்யும் காரணிகள் எனலாம். மெக்காலேயின் கல்வித் திட்டத்தால் (1835) ஆங்கிலம் படிக்கும் வாய்ப்பு தமிழர்களுக்கு முறையாகக் கிடைத்தது. கல்விமுறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. புதியதுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்நிலையில், ஆங்கிலம் அறிந்த தமிழரும் ஆங்கிலம் அறியாத தமிழருமென்ற இரு அணிகள் ஏற்பட்டன. ஆங்கிலம் படித்த பலர் தமிழைப் பற்றிச் சிந்திக்காதிருந்தனர். ஒருசிலரே தமிழ்மொழிக்கு ஆக்கந் தேட வேண்டும் என்ற எண்ணங்கொண்டிருந்தனர். அவ்வொரு சிலரில் முதல் தமிழ்ப் புதின ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுக்குக் கிடைத்த ஆங்கிலக் கல்வியின் பயனைத் தமிழுக்கு ஆக்கந்தரும் வகையில் பயன்படுத்த முனைந்தனர், அவர்களுக்கு அறிமுகமான ஆங்கிலப் புதினங்களைப் போன்று தமிழிலும் புதுவது புனைய வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழில் புதினங்களை அறிமுகப்படுத்தினர்.

மாயூரம் வேதநாயகம்பிள்ளை, ஆங்கிலம் படித்து, நீதிபதி யாகப் பணியாற்றியவர். இராசமய்யரும், மாதவைய்யாவும் ஒரே கல்லூரியில் பயின்றவர்கள், தமிழ் இலக்கியம் பற்றிய தெளிவான கருத்தும் அவர்களுக்கிருந்தது என்பதை அவர்களின் படைப்புகள் மூலம் அறிந்துகொள்ளலாம். இராசமய்யர் மிகக் குறுகிய காலத் திலேயே உலக வாழ்வை நீத்தவர். இத்தகு வாழ்க்கைப் பின்னணி களும் அவர்களின் படைப்புகளை அறிவதற்கும் இலக்கியப் போக்கை உணர்வதற்கும் வழிவகுக்கும் எனலாம்.

ஆங்கிலத்தாக்கத்தின் விளைவாக அவர்கள் புதினத்தை உருவாக்கினாலும், தமிழ்க் கதைமாந்தர்களும், தமிழகச் சூழல் களும் கொண்ட புதினங்களைப் படைத்து, அவையும் தமிழ் இலக்கியமே என்று மக்கள் எண்ணுமாறு செய்ததில் வெற்றி பெற்றனர் என்று துணிந்து கூறலாம்.

இம்மூன்று நிலைகளையும் (அரசியல்நிலை, இலக்கியநிலை வாழ்க்கைப்பின்னணி) ஒருசேர வைத்துப் பார்க்கும்பொழுது,முதற் கால கட்டப் புதினங்களில் பாடுபொருள், உத்தி, கதைமாந்தர் படைப்பு, மொழிநடை போன்றவைகளுக்கு ஓரளவு தெளிவான விளக்கம் கிடைக்கிறது எனலாம். அரசியல் நிலையைப் பற்றி எண்ணாத சூழலும், அதிலிருந்து தப்பித்துச் செல்கின்ற கற்பனை நிகழ்ச்சியில் இலயித்தலும், தன்னைத்தேடுதல் என்கிற வேதாந்தக் கருத்தும் பெண்கல்வி என்கிற சீர்திருத்தக் கருத்துக்களை ஆங் காங்கே விரித்துரைத்தலும், இலக்கியமொழி, பேச்சுமொழி என்ற இரண்டையும் கையாளுகின்ற மொழிநடையும் இம்முதற்கால கட்டப் புதினங்களில் இடம் பெற்றுள்ளமையை உணரலாம். பிர தாப முதலியார் சரித்திரத்தில் கதைக்குள் கதைநிகழும் போக்கு பஞ்சதந்திரக்கதையை நினைவூட்டுகிறது. இடையிடையே நகைச் சுவை ததும்பும் பேச்சுக்களைப் புகுத்தி, படிப்பவர்க்கு மக்க ளிடையே பரப்ப அவர் கையாண்ட உத்தியாக இதைக் கருதலாம்

'கமலாம்பாள் சரித்திரம்' (1893) புதினம் என்கிற நிலை யில் சிறந்திருந்தாலும், ஆசிரியர் தெளிவானதொரு போக்கைக் கையாண்டுள்ளார் எனக் கூற இயலாது. நடப்பியல் வாழ்க் கையைக் கூறிச் செல்கின்ற இராசமய்யர் இறுதியில் ஆன்மீகத் தேடலை முன்வைக்க முனைந்துவிடுகிறார். இது அரசியல், சமூக நிலையில் ஒதுங்கி நிற்கும் கற்பனைப்போக்கின் வேற்றுவடிவமே

எனலாம். 'பத்மாவதி சரித்திரம்' (1898) கடைசிவரை தெளிவான தொரு நிலையிலேயே சென்று முடிகின்றது எனலாம். இராசமய்யரின் கதைமாந்தர்களை விட மாதவையாவின் கதைமாந்தர்கள் வெறும் பேச்சில் காலங்கழிக்காமல் கொள்கை அளவில் உரையாடுவதைக் காணலாம். இவையெல்லாம் புதின இலக்கியக் கொள்கையில், படைப்பாளர்கள் பெற்ற மேனாட்டு இலக்கிய அனுபவமே அவர்களுக்குத் தெளிவானதொரு பார்வையை வழங்கியது எனலாம்.

இரண்டாம் காலகட்டத்தில் பகுதியான மொழிபெயர்ப்பு மற்றும் தழுவல் புதினங்கள் எழுந்தன. கல்கியின் வருகைவரை இது மேலோங்கி நின்றது எனலாம். இரண்டாம் உலகப்போரின் விளைவுகளும், தமிழகத்தில் இந்திய தேசியம் என்ற உணர்வை விட திராவிட தேசியம் என்கிற உணர்வு மேலோங்கி நின்றதும், ஆங்கிலேயர் சார்பாக நீதிக்கட்சியின் ஆட்சியும், காந்தியின் சமூக சீர்த்திருத்தக் கொள்கைகளும் தமிழகத்தைப் பொருத்தவரை மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியது எனலாம். பெரியார் ஈ. வே. ரா., திரு. வி. க., வ. உ. சி. போன்றவர்கள் காங்கிரசு இயக்கத்திலிருந்து ஒதுங்கி நிற்கத் தொடங்கியதும் அப்போதைய குழப்புமான காலச்சூழலை உணர்த்துகிறது எனலாம்.

இக்குழப்பமான அரசியல் சூழலில், நடப்பியல் புதினங்களை உருவாக்கிய முதல் கட்டத்திலிருந்து விலக, மொழிபெயர்ப்பு மற்றும் தழுவல்களை கொண்ட புதினங்களை படைக்கும் எழுத்தாளர் அணி ஒன்று உருவாகத் தொடங்கியது. மேலைநாட்டுப் புதினங்களோடு வங்க மொழிப் புதினங்களும் இவ்வகையினருக்கு வழிகாட்டின எனலாம். அப்புதினங்கள் இடையிடையே சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறினாலும், அடிப்படையில் சமூக அரசியல் சிக்கல்களிலிருந்து தப்பித்துச் செல்லுதலும், துப்பறிதலும், தாக்கிடும் சம்பவங்கள் நிறைந்ததுமான கற்பனைகளின் சாயல்களிலேயே நடையிட்டன. காந்தியப் பின்னணி கொண்ட ஓரிரண்டு புதினங்களிலும் காந்தியின் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் இடம் பெற்றனவேயன்றி, அரசியல் கருத்துக்கள் இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது. கா. சி. வேங்கடரமணியின் புதினங்கள் இக் காலக்கட்டத்தில் விதிவிலக்காகத் திகழ்கின்றன.

இரண்டாம் காலகட்டத்தில் செய்தித்தாள்களின் மத்திய தரவருக்கம் உருவாகி, வீட்டிலிருக்கும் பெண்களும் கதைகளைப் படிக்கின்ற நிலையும் ஏற்படுகின்றன. இதழ்கள் இலக்கியத்தின் சமூகவியல் பண்பிற்கேற்ப பல வாசகர்களின் ஆர்வத்தைப் நிறைவேற்றும் வகையிலும் பல தொடர்கதைகள் எழுந்தன. ஆரணியாரும், வடுவூராரும், வை, மு. கோதைநாயகி அம்மையாரும் ஜே. ஆர். ரெங்கராசும் இவ்வட்டத்திற்குள் இடம் பெறுகின்ற எழுத்தாளர்களாகின்றனர்.

மூன்றாம் காலகட்டத்தில் (1930 முதல்) அரசியலிலும் சமூகநிலையிலும் தெளிவானதொரு போக்கு காணப்படுகின்றது. காந்தியின் தலைமையில் விடுதலை இயக்க உணர்வு மக்கள் இயக்கமாக மாறத் தொடங்குகிறது. நீதிக் கட்சியின் ஆட்சியும் 1936-இல் சென்னை மாகாணத்தில் முடிவடைகிறது. பெரியாரின் தலைமையில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கமும், பிறகு ஏற்பட்ட திராவிடர் கழகமும் சமூகச் சீர்திருத்தக் கட்சியாகவே செயல் படத் தொடங்கியது. இக்கால கட்டத்தில்தான் கல்கியின் வருகை செய்தித்தாள், இதழ், தொடர்கதை முதலியதுறைகளில் பெரிய மாறுதலை ஏற்படுத்தியது. மொழிபெயர்ப்பும், தழுவல்களுமாக இருந்த தொடர்கதைகள் தமிழரின் பழம்பெருமை உணர்த்தும் வரலாற்றுப் புதினங்களாகவும், காந்தியக் கருத்துக்களைத் தெரிவிக்கும் சமூகப் படைப்புகளாகவும், வாசகர்களின் ஆர்வத்தைத்தூண்டும் வகையில் தொடர் கதைகளாக வரத்தொடங்கின.

ஆனந்தவிகடனுக்கு எதிராக 1932-இல் மணிக்கொடி எழுந்தாலும் அதில் பங்கு கொண்ட எழுத்தாளர்கள் சிறுகதை இலக்கியத்திலேயே நாட்டம் செலுத்தினர். எனவே, புதினத் துறையில் கல்கியின் கையே ஓங்கிநின்றது. திராவிடர் கழகமும், பொதுவுடைமைக் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும், தங்கள் கட்சிக் கொள்கைகளை நிலைநாட்டிப் பரப்பும் வகையில் இலக்கியங்களை உருவாக்கின. ஆதலால், அவை புதின வடிவத்தில் கவலை கொள்ளாது, கதை நிகழ்ச்சிகளிலும் கருத்துக்களிலுமே கவனத்தைச் செலுத்தின. எனவேதான், அவை எழுந்த காலத்தில் பரபரப்பை ஏற்படுத்திவிட்டு, பிறகு ஓய்ந்தன. இதற்கிடையில் புதிய இலக்கிய உத்திகளை புதினத்தில் கையாள வேண்டும் என்ற எண்ணத்தில் ஆர். சண்முகசுந்தரம், க. நா.

சுப்பிரமணியன், சி. சு. செல்லப்பா போன்றவர்கள் தரமான புதினங்களைத் தர முனைந்தனர். இது 40, 50-களில் ஓரளவிற்கும் 60-களில் பேரளவிற்கும் வளரத் தொடங்கியது. சரசுவதி போன்ற சிறு இலக்கிய இதழ்களின் தோற்றமும், பின்னர் எழுந்த சிற்றிலக்கியச் செய்தித்தாள்களும் புதினப் படைப்பையும், விமரிசனத்தையும் ஒருங்கெடுத்துச் சென்றன. இம்முயற்சிகளால் புதின இலக்கியம் புதிய தடத்தில் செல்லத்தொடங்கியது.

இப்புதிய தடம் புதினக் கொள்கை, கதைமாந்தர் படைப்பு, உத்திகள், மொழிநடை போன்ற பல கூறுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்தியப் புதினங்கள் வரிசையிலும், உலகப் புதினங்கள் வரிசையிலும் இடம்பெறத்தக்க அளவில் இத்தடத்தில் எழுந்த புதினங்களே விளங்கின.



திருவடிச் சிறப்பு

டாக்டர் ஆ. ஆனந்தராசன்

தில்லைக்கோயிலில் பெருமான் நடனம் புரியும் இடம் சிற்றம்பலம் எனப்படும். சிற்றம்பலம் என்பதில் உள்ள சிறுமை இறைவனது நுண்ணிய அருளாற்றலைக் குறிப்பதாகும். அம்பலம் என்பதற்கு வெளி என்பது பொருள். எனவே சிற்றம்பலம் என்பது அருள்வெளி எனப் பொருள்படும். 'சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்பலம்' என விளக்கினார் சேக்கிழாரும்.

புறத்தே தில்லைச் சிற்றம்பலமும் அகத்தே அடியவர் நெஞ்சமும் இறைவனுக்குச் சிறந்த இடங்களாகும். இதனை. 'சிறைவான்புனல் தில்லைச் சிற்றம் பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான்' (20) என வரும் திருக்கோவையார் உணர்த்தும்.

'தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி (கீர்த்தி 1)

என வரும் திருவாசகமும், இக்கருத்தை உணர்த்தி நிற்றல் காணலாம்.

உலகினருக்கு மாயையே உடலாகவும், கருவி கரணங்களாகவும், இடமாகவும், நுகர் பொருளாகவும் அமைந்து உதவுவது போல முதல்வன் செய்யும் செயல்களுக்கு அவனது திருவருளே மேற்கூறிய எல்லாமாய் அமைந்து உதவும். அவனுக்குத் திருவுருவும், உறுப்புக்களும் அத்திருவுருவில் அமைந்த ஆடை, அணி, கலன், படைக்கலம் முதலியனவும், எழுந்தருளியிருக்கும் இடமும் ஆகிய எல்லாம் அருளேயாம். முதல்வனது தனுவை அங்கம் என்றும், திருக்கை, திருவடி முதலிய உறுப்புக்களைப் பிரத்தியங்கம் என்றும், அத்திருவுருவில் தோன்றும் தொழில்களும் குணங்களுமாகிய கரணங்களைச் சாங்கம் என்றும், புவன போகங்களை உபாங்கம் என்றும் வழங்குதல் மரபு.

உருவருள் குணங்க ளோடும்
உணர்வருள் உருவில் தோன்றும்
கருமமும் அருள் ; அரன் றன்
கரசர ணாதி சாங்கம்
தரும் அருள் ; உபாங்க மெல்லாம்
தானருள் ; தனக்கொன் றின்றி
அருள்உரு உயிருக்கென்றே
ஆக்கினன் அசிந்தன் அன்றே

எனச் சித்தியார் கூறும். 'சித்தாய வேடத்தாய்' (6:62:1) என்று நாவுக்கரசரும் கூறுவார்.

சித்து - அறிவு ; அது சத்தியைக்குறித்தது.

உலகத்தைத் தொழிற் படுத்துவதற்கு அச் சத்தியின் ஒரு சிறு கூறே அமையும். ஆதலால் அஃது இறைவனது திருவடி யாய் நிற்கும். சத்தி ஞானம், கிரியை என இரு திறனாய் நிகழுமாதலால் அவையிரண்டும் இறைவனுக்கு இரண்டு திருவடி களாகும்.

திருவடிகளின் பெருமையைத் தேவார அருளாசிரியன்மார் சிறந்தெடுத்துக் கூறியுள்ளனர்.

'பரிந்து காப்பன; பத்தியில் வருவன; மத்தமாம்
பிணிநோய்க்கு
மருந்து மாவன; மந்திர மாவன' (2:106:3)

என்பது திருஞான சம்பந்தரின் திண்ணிய வாக்கு.

சிந்திப் பரியன; சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன; முத்தி கொடுப்பன; பொய்த்து
இருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன' (4:92:1)
'சீலத்த ராகித் தொடர்ந்து விடாத தொண்டர்க்கு
அணியன (4:92:3)
'துன்பக் கடலிடைத் தோணித் தொழில் பூண்ட
தொண்டர் தம்மை
இன்பக் கரை முகந்து ஏற்றுந் திறத்தன (4:92:6)

'போற்றி என்பார் புலம்பும் பொழுது புணர்துணை யாவன'
(4:92:12)
அன்புடைத் தொண்டர்க்கு அமுதருத்தி இன்னல் களைவன'
(4:100:1)
'காதல் செய்யில், குருடர்க்கு முன்னே குடிகொண்டிருப்பன
(4:108:2)
'அழகெழுத லாகா அருட்சேவடி' (6:6:4)
'அரை மாத்திரையில் அடங்கும் அடி; அகலம்
அளக்கிற்பார் இல்லாவடி' (6:6:7)
என்பவை நாவுக்கரசர் கனிந்துருகிக் கூறியனவாகும்.

உயிர்கள் இறையடியை விட்டு நீங்கித் தனித்து நிற்பது ஓரிடத்தும் இல்லை. 'நாம் அரன்அடியை அகன்று நிற்பது எங்கே யாமே' எனச் சிவஞான சித்தி கூறும். 'தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப்பன்று' எனத் திருவாசகமும் கூறும். பகலவன் எல்லார்க்கும் ஒப்ப வேறுபாடின்றி ஒளியைப் பரப்பி நின்றாலும் அவ்வொளி காட்சியுடைய கண்பெற்றவர்க்குப் புலனாகுமேயன்றி அத்தகைய கண்ணில்லாதார்க்குப் புலனாவதில்லை. அது போலவே இறையடியாகிய ஞானமும், எங்கும் வியாபகமாய் நிற்பினும், பக்குவம் உடையார்க்குப் புலனாகுமேயன்றிப் பாசப் பிணிப்பு உடையார்க்குப் புலனாவதில்லை.

திருவருள் உயிர்களிடத்து அவற்றிற்கு உயிராய் உள் நின்று அறியாமையை நாள்தோறும் தேய்த்து வருதலைச் சிவ ஞான முனிவர் பின்வருமாறு விளக்கியுள்ளார். ஆன்மாக்களின் அறிவு தூல அறிவாதலின் தத்தமக்கு ஏற்ற சோபான முறையே சிறிது சிறிதாக ஏகதேசமாய் விளங்கி மேம்பட்டு வரும் இயல்பினது. அத்தன்மை நோக்கி அதற்கேற்பச் சோபான முறையாய்த் தானே முதல்வனது சிற்சத்தியும், முற்பக்கத்தின் திங்கள் போலத் திரோதான சத்தி ரூபமாய் நின்று அறிவிக்கும். அறியாமையாகிய மலமும் அம்முறையே சிறிது சிறிதாக முற்பக்கத்து இருள் போலக் கீழ்ப்பட்டுத் தேய்ந்து தேய்ந்து முடிவின்கண் பற்றறக் கழியும். அது தேயத் தேய அதற்கேற்பத் திரோதான சத்தியும் அம் முறையே சிறிது சிறிதாகத் தன் தன்மை நீங்கிச் சிற்சத்தி ரூபமாய்ப் பதிந்து பதிந்து முடிவின்கண் அதிதீவிர சத்தியாய்ப் பதியும். அது பதியப் பதிய அம்முறையே விடய வெறுப்பு உண்டாகும். அஃது உண்டாக உண்டாக அம்முறையே வீட்டின்கண்

விருப்பம் நிகழும். அது நிகழ நிகழ அதற்கேற்பப் பல்வேறு வகைப்பட்ட உபதேசங்கள் சோபான முறையான் மேற்பட்டு உள வாம். அதற்கேற்ப ஆன்மாவின்கண் அநுபவ ஞானங்களும் அவ் வாறே மேற்படும் என்று அவர் தமது பேருரையில் விளக்கியுள் ளார்.

'மன்னும் இருளை மதிதுரந்த வாறு அன்பின்
மன்னும் அரனே மலம் துரந்து'

எனச் சிவஞான போதமும் (சூ. 11. அதி.2)

'அந்த அருள் உனக்கிங் காதார மாய் நின்று
இந்துவென எறிந்திட்டு ஏகமாய் - முந்தி
உனை உனக்குத் தான் விளக்கி ஓவா துணர்த்தும்
தனை உனக்குக் காட்டுமே தான்'

எனத் துகளறு போதமும் (36) விளக்கின. 'ஞானத்தை மேன் மிகுத்தல் கோளாக் கொண்ட பெற்றியன் காண்' (6 : 76 : 9) என்னும் திருநாவுக்கரசர் திருமொழியும் நினையத் தக்கது.

பக்குவ நிலையை உயிர்கள் அடையுமாயின் இறைவன் சிறிதும் தாழ்த்தல் இன்றி, அப்பொழுதே அருளுவான் என்பதனை,

'தான் தெரிந்து அங்கு அடியேனை ஆளாக் கொண்டு
தன்னுடைய திருவடி என் தலைமேல் வைத்த
தீங்கரும்பை' (6 : 68: 4)

என நாவுக்கரசர் தன்மேல் வைத்து அருளிச் செய்தமை கொண்டு அறியலாம்.

உயிர் முதல்வனது இணையடிகளை உணருந்தோறும் அதற்குப் பேரின்பம் மேலும் மேலும் விளையும் என்பதை,

'ஏகமாய்நின்றே இணையடிகள் ஒன்றுணரப்
போகமாய்த் தான் விளைந்த பொற்பினான்'

(சூ. 11. அதி 1)

எனச் சிவஞான போதம் உணர்த்துகிறது.

சிவானந்தம் உயிர்க்குப் புதிதன்று. அஃது என்றும் உள்ளதேயாம். ஆயினும், புதிதாய் வந்தது என்று கருதும்படி 'போகமாய்' என ஆக்கச்சொல் கொடுத்துக் கூறிய கருத்தினை நுணுகிக் கண்டு

உரைக்கின்றார் சிவஞான முனிவர். நிலம் வலிதாயிருத்தல் இயற்கையாயினும் சேற்றுநிலம் மிதித்துச் சென்ற ஒருவன் வலிய நிலத்தை அடைந்த போது 'நிலம் வலிதாயிற்று' என அதனை செயற்கை போல ஆக்கங் கொடுத்துக் கூறுவான். அதுபோலச் சிவபோகம் உயிர்க்கு இயற்கையேயாயினும் இதுகாறும் உலக போகத்தையே நுகர்ந்து வந்தமையால், பசுத்துவம் நீங்கிய உயிர்க்கு அது புதிதாய்ச் செயற்கைபோலத் தோன்றுதல் பற்றி 'போகமாய்த் தான் விளைந்த பொற்பினான்' என ஆக்கம் கொடுத்துக் கூறப்பட்டது.

'சிவனடியைத் தலைப்பட்ட உயிர் மீண்டும் அதனின்றும் நீங்கிக் கருவிகளை அடைதலில்லை; அணை முறியப் பெற்ற ஆற்றுநீர் கடலில் விழுந்து அதில் அடங்கிவிடுதல் போலத் திருவருள் வியாபகத்தில் அடங்கி நிற்கப் பெறும்.

'அலைகடலில் சென்றடங்கும் ஆறுபோல் மீளாது
உலைவில் அரண் பாதத்தை உற்று' (சூ 8. அதி. 4)

சிவனது சத்தியாகிய அரன் பாதத்தை உலைவில் அரன்பாதம்' என விசேடித்த காரணத்தைச் சிவஞான முனிவர் பின்வருமாறு விளக்குவார். "மல சத்திக்குக் கேடு உண்மையின் கேவலப்பட்ட உயிர் கருவிகளின் மீளுதல் சுடும். சிவசத்திக்கு அவ்வாறு கேடின் மையின் சுத்தப்பட்ட உயிர் அதுபோல் மீளுதற்கோர் இயை பில்லை என்பார் உலைவில் அரன் பாதம் என விசேடித்தார்".

வியாபகமாகிய திருவருளில் வியாப்பியமாகிய ஆன்மா அடங்கி அழுந்தி நிற்கும். இந்நிலை அடிசேர்முத்தி எனப்படுகிறது.

'சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங்கு யாமே'
(சித்தியார் 8:12)

'திரி மலமும் அகல உயிர் அருள்சேர் முத்தி
திகழ முத்தி' (சிவப்பிரகாசம் 50)

முதல்வன், 'தன்னுண்மை அறியமாட்டாது குரு'-ாய்க் கிடந்த உயிர்க்குப் பலவாற்றானும் அதனைத் தெரித்துணர்த்தி எத்தனையும்' எளிய அவ்வுயிரை எத்தனையும் அரிய தானாம் எண்ணம் செய்தளிக்கும்' இப்பேருபகாரத்தை நன்கு உணர்த்தி நிற்பது அவன் ஞானக்கூத்து இயற்றும் கோலமாகும். துடியை அசைத்தல், பக்குவம் எய்திய ஆன்மாவின் உணர்விலிருந்து

மாயையை உதறிவிலக்குவதேயாகும். ஓம அங்கியை ஏந்தியுள்ள கை, அவ்வான்மாவின் தொல்வினைகளைச் சுடுவதாயிருக்கும். ஊன்றிய திருவடி, ஆணவ மலத்தை வலி கெட்டு நிற்கச்செய்வதாகும். தூக்கிய திருவடி, சகல கேவல நிலைகளில் சுழன்று வந்த அவ்வுயிரை எடுத்துத் துரிய அருள்நிலைக்கண் சேர்த்தவைக் குறிப்பதாகும். அவ்வெடுத்த திருவடியின் குஞ்சித்த (வளைத்த) நிலையும், அதற்கு ஒப்ப அப்பாதத்தைக் காட்டும், திருக்கையும், நில் என்னும் பொருள்பட அமைத்த திருக்கையும், துரியாதீதம் எனப்படும் ஆனந்த நிலையில் உயிரை அழுத்துதலைக் குறிப்பதாகும்.

பெருமானது இணையடிகளில் ஊன்றிய திருவடி பாச நீக்கத்தைக் குறிக்கும்; எடுத்த திருவடி சிவப்பேற்றினைக்குறிக்கும் சிவப்பேறே சிறந்த பயனாதலின் எடுத்த திருவடியையே யாவரும் சிறந்தெடுத்துப் போற்றுவர். எடுத்த சேவடியின் அழகில் ஈடுபட்டும், அதன் உபகாரத்தை நினைந்து உருகியும், அதனைக் கற்பனை நலத்தோடு கண்டு பாடியும், பரவியும் பணிந்தும், மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்த அருளாளர்கள் எண்ணிலர்.

ஆடும் கழல் புரியும் அமுதத் திருநடம் ஆராவகை தொழுத நாவுக்கரசர் 'ஆட எடுத்திட்ட பாத மன்றோ நம்மை ஆட்கொண்டதே' என விம்மிதமுற்றுப் பேசுகிறார்; இனித் தம்முடைய எடுத்த பொற்பாதத்தைக் குறிப்பிட்டு, அதனைக் காணப் பெற்றால் வெறுக்கத்தக்க இப்பிறவியும். வேண்டத்தக்க உயர்வுடையதாகும் என்கிறார்.

பிற்காலப் புலவர்களில் சிறந்தவராயும், சிவானுபவச் செல்வராயும் விளங்கிய குமரகுருபரர் இறைவன் திருவடிகள் சிவந்திருப்பதற்குரிய காரணத்தைச் சிந்திக்கிறார். அவன் ஆடுவதால் சிவந்திருக்குமோ? அப்படியானால் ஊன்றி ஆடும் ஒரு பாதம் மட்டும்தானே சிவந்திருக்க வேண்டும். தூக்கிய திருவடியும் சிவக்கக் காரணமில்லையே. உமையவள் தன் மென்மையான கைகளால் பிடிப்பதாலும் சிவக்காது. வேறு காரணம் இருக்க வேண்டும். தேவர்கள் தம் தலைவனென்று இறைவன் திருவடிகளைத் தம் முடிகளிற் சூடுவதால் அத் திருவடிகள் சிவந்தன போலும் என்று முடிக்கின்றார். (சிதம்பர மும்மணி. 31)

தூக்கிய திருவடியுடன் இறைவன் காட்சியளிப்பதற்கு ஒரு காரணத்தைக் கற்பனை செய்கிறார். அயன் முதலான தேவர்கள் இறைவன் பாதங்களில் பணிந்து வணங்க, அவர்கள் தலை, யிலுள்ள மணிமுடிகள் பட்டுப் பட்டுப் புண்ணாவதால் பெருமான் ஒரு காலைத் தூக்கி நிற்கின்றானாம்! (சிதம்பர செய்யுள். 63)

பதஞ்சலி முனிவர் ஆதி சேடன் ஆகையால் இறைவன் இரண்டு பாதங்களையும் ஊன்றினால் பாரம் நிலத்தினை அழுத்தி அதைச்சுமக்கும் தன்னையும், வருத்தும் என்று கருதி, ஒரு காலைத் தூக்கி நின்றாடும் ஆட்டத்தைக் காண வரம் வேண்டினாராம். அதனால் தான் இறைவன் இடத்தாளினைத் தூக்கி நின்றாடு கிறான் என்கிறார். (சிதம்பர மும்மணி. 4)

தூக்கிய திருவடியைப் பற்றி இன்னொருவிதமாகவும் கற்பனை செய்கிறார் குமரகுருபரர். தன் திருவடியைக் காணாமல் இருக்கும் திருமால் காணும்படியாகத் தன் இடத்தாளைக் காட்டித் துணிந்து ஆடுகிறானாம். தில்லையில் தன் முன்னுள்ள திருமால் பார்த்தாலும் சிவனுடைய பாதத்தைக் கண்டு விட்டேன் என்று அவன் பெருமைப்பட முடியாதாம். ஏனெனில் எடுத்த அப்பாதம் உமாதேவியாருக்கு அல்லவா உரியது? (சிதம்பர மும்மணி. 12)

தூக்கிய திருவடி உணர்த்தும் தத்துவப் பொருளையும் குமரகுருபரர் காட்டத் தவறவில்லை.

> 'அடுத்த இன்னுயிர்கட்கு அளவில் பேரின்பம்
> கொடுபபது முதல்வ! நின் குஞ்சித பதமே'
>
> (சிதம்பர மும். 2 வரி 11-12)

என்று பாடியுள்ளமை காணலாம்.

இது காறும் கூறியவற்றால் திருவடியே வீடாயிருக்கும் என்பதும், தூக்கிய திருவடி உணர்த்தும் உட்பொருள் இன்னது என்பதும், அத்திருவடி அருளாளர் உள்ளத்தில் எத்தகைய உணர்வுகளையும் கற்பனைகளையும் எழுப்பியது என்பதும் ஒருவாறு அறியலாம்.

நூல் மதிப்புரை

குவெம்புவின் சிறுகதைகள்

வெளியீடு : சாகித்ய அக்காதெமி பக்கங்கள் : 98

தமிழாக்கம் : ஆர். நடராஜன் விலை ரூ 15/.

இயந்திர நாகரிகத்தின் விளைவாக இந்திய மொழிகளில் உரைநடை வளர்ச்சி கடந்த நூற்றாண்டில் புதிய வேகத்துடன் தொடங்கியது. எல்லா இந்திய மொழிகளிலும் 19-ஆம் நூற்றாண்டில் நாவல் வடிவமும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிறுகதை வடிவமும் அரும்பத் தொடங்கின.

திராவிடமொழிகளில் மற்ற மொழிகள் சந்தித்திராத ஒரு சிக்கலைக் கன்னடமொழி சந்தித்தது. கருநாடகத்தில் வடக்கு, தெற்கு, மேற்கு என்ற மூன்று நிலப்பிரிவுகளும் சேர்ந்து ஒரு ''கன்னட தேசிய உணர்வு'' உருவாவதற்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் கழிந்து போனது. இந்தப் பின்னணியில் தான் நிகழ்காலத்துக் கன்னட இலக்கியத்தைக் காண வேண்டும்.

குவெம்புவின் சிறுகதைகள்

இப்பொழுது குவெம்புவின் சிறுகதைகளைத் தமிழில் மொழி பெயர்த்து சாகித்திய அக்காதெமி வெளியிட்டுள்ளது. குவெம்பு ஒரு கல்வியாளர்; பின்னர் கவிஞராகவும், சிறுகதை எழுத்தாளராகவும் மலர்ந்தவர்.

இத்தொகுப்பில் உள்ள ஒன்பது சிறுகதைகளில் குவெம்புவின் கல்விமுத்திரை ஆழப்பதிந்துள்ளது. ஆரவாரமும், வெற்றுச் சொற்களும் உள்ள பாத்திரங்களை இச் சிறுகதைகளில் எங்கும் காணோம். அழுத்தமான மன உணர்வுகள் இச் சிறுகதைகளில் எளிய நடையில் பதிந்துள்ளன.

''கிறித்துவன் அல்லன், பாதிரியின் மகன்'' என்ற கதை இளமையின் ஆரவார உணர்வுகள் கால ஓட்டத்தில் நீர்த்துப் போகும் முறையினை அழகாக விளக்குகிறது. துங்கா நதிக் கரையின் எளிய மனிதன் ஒருவனின் ஆன்ம வீரத்தை ''யாரும் அறியாத வீரன்'' என்ற கதை காட்டுகிறது. நம்முடைய அற உணர்வினையும், அறிவையும் கொண்டு அளக்க முடியாத மனிதர்கள் சிலர் இன்றும் நம்மிடையே வாழத்தான் செய்கின்றனர் அறச்சங்கடத்தில் நம்மை ஆழ்த்தும் மனிதர்கள் இவர்கள். அப்

படிப்பட்ட மனிதர்கள் இருவரை ''ஆறணா மூன்று காசு'' சிறு கதை விளக்குகிறது. ''மாயத்தின் வீடு'' புதுமைப்பித்தனின் ''காஞ்சனையை ஓரளவு நினைவு படுத்துகின்ற கதையாகும். ''தெய்வத்தின் தாக்குதல்'' என்ற உடைமை உணர்வுகள் செய்யும் திருட்டுத்தனம் ஒன்றை நோகாமல் தோலுரித்துக் காட்டுகிறது.

எளிய சொற்கள், எளிய உணர்வுகள், ஆரவாரமின்மை ஆகியன இந்தக் கல்வியாளரின் சிறுகதைகளில் நாம் காணும் அரிய கூறுகளாகும். மொழிபெயர்ப்பு செம்பாகமாக அமைந்துள்ளது. ஒரு மூலத்தின் பெயர்ப்பு என்றுதோன்றாமல், உணர்வும் துடிப்பும் குன்றாமல் அமைந்துள்ளது பாராட்டுக்குரியது.

மௌன ஓலம் (புதினம்)

வெளியீடு : சாகித்ய அக்காதெமி பக்கங்கள் : 358

ஆசிரியர் : சதுரங்க விலை ரூ. 40-00

தமிழாக்கம் : தண். கி. வேங்கடாசலம்

சதுரங்க அவர்களின் 'வைஷாக' என்ற புதினம் தமிழில் மௌன ஓலம் என்ற பெயரில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

''இந்நூலுக்கு ஆசிரியர் கொடுத்துள்ள பெயர் மிகச்சிறப்பாக அமைந்துள்ளது. 'வைகாசித் திங்கள் உயிர்களுக்குப் பெருந்துன்பம் தருவது' என்ற கருத்து தென் கருநாடகத்தில் நிலவி வருகின்றது. இந்நூலில் வரும் பாத்திரங்கள் கொடுமைத் தீயில் வெந்து நொந்து வேதனைப் படுகின்றன! என்ற இந்நூலின் மொழிபெயர்ப்பாளரின் கருத்தினை இந்நூலுக்கான ஒரு திறனாய்வாகவும் கொள்ளலாம். தென் கன்னடத்தின் மண் மணம் இந்தப் புதினம் முழுவதும் விரவிக் கிடக்கிறது. இது தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த லக்கனை மையமிட்டு, சமூகத்தின் பல்வேறு தரப்பிலும் நிகழும் அனுபவங்களை விவரிக்கிறது. மேல் சாதியினரின் மூடநம்பிக்கைத் தளைகள், எல்லாச்சாதியிலும் பெண் மக்களின் அவலங்கள் முதலியன நூலின் பெரும்பகுதியில் இடம் பெறுகின்றன. வருணனைப் போக்குகளில் புதின ஆசிரியரின் கூர்த்த பார்வையை எளிதில் காணமுடிகிறது. இவ்வாசிரியரின் பழமொழி அறிவு வாசகர்களைத் திணறடிக்கிறது.

சமூகக் கொடுமைகளைத் தாங்கமுடியாத லக்கன் கடைசியில் ஊரைவிட்டே ஓடிவிடுகிறான். ஆயினும் ருக்மணியும் லக்கனும் இப்புதினத்தில் நெஞ்சில் நிற்கும் பாத்திரங்களாகி விடுகின்றனர். சாகித்திய அக்காதெமியின் மொழிபெயர்ப்புப் புதினங்களில் இது ஒரு தரமான இடத்தைப் பெறுகிறது.

– ச. செந்தூரன்

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடுகள்

1. மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு 12-00
2. பன்னூற்றிரட்டு [illegible]-00
3. தமிழ்ச் சொல்லகராதி 25-00
4. மாறனலங்காரம் (பொருளணியியலுரை) 25-00
5. பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்) 2-00
6. குருகைமான்மியம் 10-00
7. டி. சி. ஸ்ரீனிவாசய்யங்கார் நினைவு மலர் 1-00
8. பெருந்தொகை 15-00
9. செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு 5-00
10. செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு) 10-00

11. கோவை, கலம்பக நூல்கள் 12-00

1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
2. மதுரை மும்மணிக் கோவை
3. சிராமலைக்கோவை
4. கலசைக்கோவை
5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
6. திருவருணைக் கலம்பகம்
7. குருமொழி வினாவிடை

12. உலா நூல்கள் [illegible]00

1. திருவாரூருலா
2. திருச்சிறு புலியூர் உலா
3. விக்கிரம சோழனுலா
4. கடம்பர் கோவில் உலா
5. தேவையுலா
6. புலவராற்றுப்படை

13. பாமாலைநூல்கள் 12-00

1. திருப்பணிமாலை
2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
3. திருக்குற்றாலமாலை
4. திருப்புல்லாணிமாலை
5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
6. கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை
7. கலைசைச் சிலேடை வெண்பா
8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. இலக்கிய நூல்கள் 12-00

1. முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (மூலமும் உரையும்)
5. சங்கர நயினார்கோவில் அந்தாதி
6. திருத்தணிக்கைத் திருவிருத்தம்
7. நான்மணிக் கடிகை (மூலமும் உரையும்)

15. இலக்கண நூல்கள் 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. மநிஷா பஞ்சகம்

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

o O o

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ 10-00. செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும்பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 1

பரணி அச்சகம் ❀ மதுரை - 1